புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம்௵ ஜூன்௴ 12௳ [ந. 150

பிரஸங்கம் CL.

## வெற்றிப்பாட்டு.

(தேசீய யுத்த முன்னணி—ஸப்ளிமெண்ட்).

தேசீய யுத்த முன்னணி ஒரு வருஷம் வேலைசெய்து விட்டது. இந்த இயக்கத்தின் பிரயோஜனத்தை அறிந்தவர்கள் இந்த இயக்கம் மூன்று அல்லது, ஐந்து, அல்லது 15 வருஷங்களுக்கு முன்னதாகவே தோன்றவில்லையேயென்று வருந்துகிறார்கள். வெகுநாட்களுக்கு முன்னதாகவே இந்த இயக்கத்தின் பிரசார முறைகள் நிறுவப்படவில்லையென்றும் இந்த இயக்கத்தின் சிறந்த நோக்கங்கள் இதுவரையில் மறை பொருளாகவேயிருந்ததென்றும் வியப்புறுகிறார்கள். யுத்தம் ஆரம்பித்தபிறகுதான் இந்த இயக்கம் முன்னுக்கு வந்தது. இத்துடன் அவர்கள் மற்றொரு உபப்பிரச்னையையும் கேட்கிறார்கள். தேசீய யுத்த முன்னணி யுத்த காலத்துக்கு ஏற்பட்ட இயக்கமில்லை. யுத்த அவசியத்துக்காக தேசமக்களைத் தயார் செய்வதோடு மட்டுமில்லாமல் யுத்தத்துக்குப்பின் தேசமுன்னேற்றத்துக்கு அதை ஏன் உபயோகப்படுத்தக்கூடாதென்றும் அவர்கள் கேட்கிறார்கள். இந்தியாவின் வருங்கால க்ஷேமத்திற்கு அதன் ஒற்றுமையையும் வலிமையையும் உண்டுபண்ண இந்த இயக்கம் அதன் சக்தியை ஏன் உபயோகப்படுத்தக்கூடாதென்றும் அவர்கள் கேட்கிறார்கள். அப்படியே செய்யலாமென்று நாமும் விரும்புகிறோம்.

இந்த இயக்கம் தோன்றுவதற்குக்காரணம் என்னவென்று இங்கு கூறுவோம். அப்பொழுது நிலைமை திருப்திகரமாகயில்லை. பிழைத்திருப்பதே சந்தேகமாகயிருந்தது. சிறிது நம்பிக்கையும், அநேகம் பிரார்த்தனைகளும் தவிர, ஒருவரும் வெற்றியின் தோற்றத்தைப்பற்றி தெளிவான அபிப்பிராயம் கொள்ளவில்லை. சுமார் $2\frac{1}{2}$ வருஷங்களுக்கு முன்னதாக ருஷ்யாவைத் தவிர, மற்றெல்லா போர்முனைகளிலும் எதிரிகளைத் தடுத்து நிற்கும் நிலைமையிலேதான் நாமிருந்தோம். ஐரோப்பாவை ஜெர்மனி ஆக்கிரமித்துவிட்டதென்று இந்தியர்கள் கேள்வியுற்றார்கள். கீழ் நாடுகளில் ஜப்பானியப்பூச்சி எட்டியவரையில் கைப்பற்றிக்கொண்டது. உள்நாட்டிலேயோ, பலாத்காரமான புரட்சியைக்கொண்டு தேசபக்தியை நசுக்கி அரசியல் ஆதிக்கம்பெற ஒரு கூட்டத்தார் பெருமுயற்சி செய்து கொண்டிருந்தனர். இது கண்ட பாமரமக்கள் திகைத்தனர், பயப்பட்டனர், பசிப்பிணிக்குள்ளாயினர்.

தேசீய யுத்த முன்னணி ஸ்தாபகர்கள் இந்தியாவிலுள்ள மக்கள் "ஆண் பிள்ளைகளா, பேடிகளா என்ற கேள்விக்குப் பேடிகள் அல்ல" என்று உறைத்தார்கள். அலக்ஷிய புத்தியையும், அறியாமையையும் தோல்வி மனப்பான்மையும் அழிக்கவேண்டுமென்றனர். மௌரியா, மோகல், உஜ்ஜைனி, விஜயநகர சாம்ராஜ்யங்களின் புகழை நாம் மாணாக்கர்களுக்கு ஞாபக மூட்டுவோம். புவனேஸ்வர், அஜண்டா, முகந்ததாரோ, ஹலிபிட் முதலிய சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் அச்சு நாட்டாரின் பீரங்கிகளுக்கு இலக்காவதோ என்று முன்னணியார் கேட்டனர். சாந்த்பீ, சிவாஜி, கிளைவ் ஆகியோருடைய வெற்றிகளை இளைஞர்களுக்கு ஞாபகமூட்டினர். ஈஸ்வரன் நித்யமானவனல்லவா என்றும் ராமப்பிரபு அழிப்பதற்கான ராக்ஷஸர்களில்லையாவென்றும் நாம் தெய்வ பக்தியுள்ளவர்களைக் கேட்டோம். நாம் ஸ்துதி பாடகர்களையும் கவி பாடுகிறவர்களையும், காவ்யம் எழுதுகிறவர்களையும், நாடகம் எழுதுகிறவர்களையும் வேண்டிக்கொண்டு காளிதாஸன், துளசிதாஸ், அபுல்பஸால் முதலியவர்

களின் புஸ்தகங்களை ஆராய்ச்சி செய்வோம். நமது பொது மக்களை இந்தியர்களைத் தவிர வேறு நாட்டார் பஞ்சாபிலுள்ள கோதுமை வயல்களையும், ஜாரியாவிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களையும், அட்டாக்கிலுள்ள எண்ணெய்க் கிணறுகளையும், காவேரிக்கரையிலுள்ள நெல் வயல்களையும் கைப்பற்ற உரிமை ஏது என்று கேட்டனர்.

தேசிய யுத்த முன்னணி மேலே சொல்லிய அலுவல்களைச்செய்ய முயன்றது. ஒரு வருஷத்திற்குள்ளாகவே ஒரு தலை முறைக்குமேல் நிலைபெறக்கூடிய காரியங்களைச்செய்து முடித்துவிட்டது. சில தோல்விகளும் குறைபாடுகளுமிருந்திருக்கின்றன. இதில் ஈடுபடாத அநேகர் இன்னும் இருந்து வருகிறார்கள். முன்யோசனையுடனும், முயற்சியுடனும் செய்யவேண்டிய பல காரியங்கள் இருக்கின்றன. இந்தியாவிலும், இந்த மாகாணத்திலும் மக்களின் மனோதிடம் வலுவடைந்துவிட்டது. இந்த இயக்கம் இம்மாகாண மக்களின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. சந்தேகிகளையும், குறைகூறுபவர்களையும், எதிரிகளையும் வென்று கொண்டு வருகிறது.

யுத்தப்போக்கில் மாறுதல்கள் ஏற்பட்டதுபோல் தேசிய யுத்த முன்னணியின் நோக்கங்கள் மாறுபாடடைந்து விட்டன. சென்ற வருஷத்திலும், இந்த வருஷ ஆரம்பத்திலும் "இது இந்தியாவின் யுத்தம்" "அச்சு நாடுகளின் ஆதிக்கம் அழியவேண்டும்" "இந்தியாவின் கௌரவம் பாதுகாக்கப்படவேண்டும்" "பொய்வதந்திகளின் ஆதிக்கத்தை அழிக்கின்றதனால் அவற்றை நசுக்கவேண்டும்" என்றெல்லாம் சொன்னோம். இப்பொழுது வெற்றிக்குறிகள் தென்படுகின்றன. எனவே நமது பல்லவியும் மாறுபடவேண்டும். "வெற்றி தென்படுகிறது, அதன் பொருட்டு நாம் உழைக்கவேண்டும்." "கைத்தொழில்களின் முன்னேற்றத்திற்கு இந்தியாவிற்கு இது ஒரு சந்தர்ப்பம்." "வெற்றியைக்கொண்டுதான் விடுதலை பெறுவோம்" என்பதுதான் இன்றையமுரசுகள். இந்த மாறுதல்கள் கவனிக்கத் தக்கவை.

தேசிய முயற்சிக்குப் புதிய உத்சாகம் உண்டாகியிருக்கிறது. நாம் வெற்றிமார்க்கத்தில் புறப்பட்டு விட்டோம். பொறுமையும், சந்தேகமும், லக்ஷியத்தின் மறைவும்தான் வெற்றி மார்க்கத்திலிருந்து நம்மை விரட்ட முடியும். பயங்கரமான நிலைமையும், பயமும், அவநம்பிக்கையும், துரோகபுத்தியும் மேலிட்டிருந்தபொழுது, தேசிய யுத்த முன்னணியின் நோக்கங்கள் ஒரு உறுதிமொழியாக உருவமாயிற்று. எந்த ராஜீய கக்ஷியைச் சேர்ந்தவரும் உறுதிமொழியின் ஒரு வார்த்தையையும்கூட ஆக்ஷேபிக்க முடியாது. வெற்றியின் நிச்சயமான சின்னங்கள் ஏற்படும் சமயத்தில் 'மற்றொரு புத்திசாலி, மற்றொரு உறுதிமொழியை நமக்குத் தயாரித்துக் கொடுக்கவேண்டும். யுத்தப்போக்கின் கோரமான வரம்பைத்தாண்டி புதிதான உலகம் அமைக்கப்படவேண்டுமென்று எதிர் பார்க்கும் தேசிய யுத்த முன்னணியின் நோக்கத்தை புதிய உறுதிமொழி வரையவேண்டும்".

---

## வார யுத்தச் செய்திகள்.

---

### 5—6—43-லிருந்து 11—6—43-வரை.

**ருஷ்யா.**—ருஷ்ய யுத்தம் மறுபடியும் எப்பொழுது ஆரம்பமாகுமென்றும், எந்தக் கக்ஷியினர் முதலில் தாக்குவார் என்றும், இதுவரை ஒன்றும் தெரியவில்லை. சில நாட்களுக்கு முன்பு புதிதாக ஜெர்மானியத் தாக்குதலுக்கு மாஸ்கோ இலக்காக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இப்பொழுது, டானெட்ஸ், குபான் ஆகிய பிரதேசங்களின் மேல் தாக்குதல் ஏற்படும் என்று கூறப்படுகிறது. இதற்குள்ளாக பயங்கரமான விமானச்சண்டைகள் நடத்தப்படுகின்றன. காலினின், ஓரல், லிஸிசான்ஸ்க், குபான் யுத்த அரங்கங்களில் யுத்தம் நடப்பதாகவும் கூறப்படுகிறது.

**அட்டுத்தீவு.**—அட்டுத்தீவு அமெரிக்கர்களால் திரும்பவும் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டது. ஆக்கிரமித்த ஜப்பானியத் துருப்புகள் முற்றிலும் நாசமாக்கப்பட்டுவிட்டனர்.

**சைனா.**—சங்கிங்கிற்கு வாசல் கதவுகள் என்று சொல்லப்பட்டும் யுயாங்வானைத் திரும்பவும் சைனாக்காரர்கள் பிடித்துவிட்டனர். ஷிபாய்க்கு அருகில் நடந்த 5 நாள் யுத்தத்திற்குப் பிறகு, சாங்யாங், சிகாங், இட்டு, டாங்யாங், கங்கான் ஆகிய நாடுகளிலிருந்து எதிரிகள் விரட்டப்பட்டுவிட்டனர். சங்கிங்கின்மேல் எடுத்த ஜப்பானியப் படையெடுப்பு முற்றிலும் முறியடிக்கப்பட்டது.

# சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**31—5—43.** (திங்கட்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—(2 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன, நேசதேச விமானம் காணப்படவில்லை).

விமான நிலயம்.—கேயன் (Caen).

கப்பற்கட்டும் துறைகள்.—பிரான்ஸிலுள்ள செர்பர்க் (Cherbourg).

லக்ஷியங்கள்.—பெல்ஜியத்திலுள்ள பிளஷ்ஷிங் (Flushing), ஸீப்ரக்(Zeebrugge)கே

விமானச் சண்டைகள்.—நியூ போர்ட் (New port).

**இதாலி (Italy),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

விமான நிலயம், நிர்வாகக்கட்டடங்கள், சைனியங்கள் தயார்செய்யுமிடங்கள்.—இதாலியிலுள்ள போகியா (Foggia).

கப்பற் கட்டும் துறைகள், மின்சார நிலயங்கள், ராணுவ நிலயங்கள்.—ஸார்டீனியா (Sardinia), பான்டல்லேரியா.

அச்சுநாட்டுக் கப்பல்கள்.—ஏஜியான் கடல் (Aegean Sea).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

விமான நிலயம்.—கைதீவிலுள்ள ராங்கார்.

நியூ கினியாவிலுள்ள பின்ஸ்சாபென் (Finschhafen)..

துறைமுகம் நகரப்பிரதேசங்கள், விமான நிலயம்.—நியூ கினியாவிலுள்ள லே (Lae).

எதிரி ரயில்வே ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள மாண்டலே (Mandalay).

விமான நிலயங்கள்.—பர்மாவிலுள்ள மனிவா (Manywa), டும்பங்கா (Tumbonghka).

ரஸ்தாப்பாலம்.—பர்மாவிலுள்ள கமெய்ங் (Kamaing).

ராணுவ சாமான்கள்.—பர்மாவிலுள்ள ஷிங்பான் (Shingban).

பாலம்.—பர்மாவிலுள்ள ஷ்வேலி (Shweli).

**1—6—43.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—5 சிறிய ஸப்ளைக் கப்பல்கள்—ஹாலந்துக் கடற்கரை.

ரயில்வே இலக்குகள்.—வடக்கு பிரான்ஸ் (North France).

விமானச் சண்டைகள்.—வடக்கு பிரான்ஸ் (5 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**இதாலி (Italy),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

ஸப்ளைக் கப்பல்கள், ரயில்வே கப்பற்கட்டும் துறை ஸ்தாபனங்கள்.—ஸார்டீனியா (Sardinia).

கடல் விமான தளம்.—ஸ்டேக்நாணி (Stagnane)தீவு.

பான்டேல்லேரியா (Pantellaria).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ரயில்வே ஜங்ஷன்.—ஸ்மலன்ஸ்க் (Smolensk).

ரயில்வே ஸ்டேஷன்.—ஜெர்மனி ஆக்கிரமித்த ருஷ்யாவிலுள்ள காராச்சேவ் (Karachev), கிராஸ்னிபார் (Krasnybor).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய தளம்.—நியூ கினியாவிலுள்ள லே (Lae).

நியூ கினியாவிலுள்ள பின்ஸ்சாபென் (Finschhafen).

அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

முக்கிய ஜப்பானிய தளம்.—சீனாவிலுள்ள இச்சாங் (Ichang).

இருப்புப்பாதை ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள மாண்டலே.

**2—6—43.** (புதன்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—(5 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ரயில்வே இலக்குகள் பீரங்கி தாங்கிய படகுகள்.—ஆக்கிரமித்த பிரதேசங்கள்.

மாலை.—விமானச் சண்டைகள்—பிஸ்கே வளைகுடா (Bay of Biscay) (5 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

**இதாலி (Italy),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

இலக்குகள்.—ஸார்டீனியாவிற்கருகிலுள்ள ஸான் அண்டியாகோ (San Antiago)தீவு.

பான்டேல்லேரியா (Pantellaria).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ரயில்வே ஜங்ஷன்கள்.—கீயப்(Kiev), ரோஸ்லாவி (Roslavi). (3 ருஷ்ய விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

**தூரக்கிழக்கு (Far East).**

அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

ஜப்பானிய விமான நிலயங்கள்.—நியூ கினியா விலுள்ள வீவாக் (Wewak)பிரதேசம், நியூ கினியாவிலுள்ள புல்டாக் (Bulldog) பிரதேசம்.

விமான நிலயம்.—கிளாஸ்டர்முனை (Cape Gloucester).

டச்சு நியூ கினியாவிலுள்ள ஹாலண்தி (Hollandi).

கப்பல்கள்.—லேண்டம் (Lantem).

ஜப்பானியச் சைனியங்கள்.—சீனாவிலுள்ள டங்டிங் (Tungting) ஏரி, யாங்டிஸ் (Yangtse)பிரதேசம்.

சீனாவிலுள்ள இச்சாங் (Ichang).

கிட்டங்கிகள்.—பர்மாவிலுள்ள ஸால்வீன் (Salween) பிரதேசம்.

எதிரி ரேடியோ ஸ்தாபனங்கள்.—ரங்கூனுக்கு தென்மேற்கிலுள்ள டயமாண்டு தீவு (Diamond).

**3—6—43.** (வியாழக்கிழமை).

### ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

இரவு.—சுரங்கவேடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

### இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

பான்டேல்லேரியா (Pantellaria).

விமான நிலயங்கள்.—ஸார்டீனியா (Sardiniya).

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ரயில்வே ஜங்ஷன்கள்.—ஜெர்மனி ஆக்கிரமித்த ருஷ்யாவிலுள்ள ஒரெல் (Orel).

### தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளங்கள்.—டிமோர் (Timor), டச்சு நியூ கினி, நியூ பிரிடன், அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

கிட்டங்கிகள், ரயில்வே தளங்கள்.—சைனாவிலுள்ள கேண்டான் (Canton), ஹேங்கௌவ் (Hankow) ரயில்வேக்கள்.

பேய்லோகி (Pailoki) விமான நிலயம்.—சீனாவிலுள்ள யோச்சௌ (Yochow), இச்சாங் (Ichang).

கிட்டங்கிகள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab).

சாமான் படகுகள்.—பர்மாவிலுள்ள மாங்டா (Maungdaw), பூதிடாங் (Buthidaung) பிரதேசம்.

ராணுவ லக்ஷியங்கள்.—பர்மாவிலுள்ள கேலிம்யோ (Kalemyo).

**4—6—43** (வெள்ளிக்கிழமை).

### ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல், இரவு.—ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

### இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயம்.—இதாலியிலுள்ள குரோட்டால்கிளி (Grottalglie), பான்டல்லேரியா (Pantellaria).

இதாலியிலுள்ள கட்டான்ஸாரோ (Catanzaro).

விமான நிலயங்கள்.—ஸிஸிலியிலுள்ள ஸீராகூஸ் (Syracuse), மிலோ (Milo).

இயந்திர பீரங்கி ஸ்தானங்கள்.—ஸிஸிலிக் கருகிலுள்ள பெவிக் நாணுதீவு (Favignona).

### ஜெர்மன் ஆக்கிரமித்த ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ரயில்வே ஜங்ஷன்கள்.—பிரையான்ஸ்க் (Bryansk).

ரயில்வே ஸ்டேஷன்.—கராச்சேவ் (Karachev)

### தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள், யுத்த தளவாடக் குவியல்கள், தரைமீதுள்ள விமானங்கள்.—விவாக் (Wewak), பட் (But), டாகுவா (Dagua), போரம் (Boram).

எண்ணெய்க் கிடங்கு ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள சாக் (Chauk).

தொழிற்சாலை.—பர்மாவிலுள்ள மையான் (Myaungn).

பூதிடாங் பிரதேசம் (Buthidaung).

ஸப்ளைக் குவியல்கள்.—சீனாவிலுள்ள டாங்யாங் (Tangyang), இட்டாலி(Italy).

**5—6—43.** (சனிக்கிழமை).

### ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல், இரவு—ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

### இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

இதாலிய கப்பற்படை தளம்—ஸ்பெஸியா (Spezia)—(சண்டைக் கப்பல்களும், 8 இதர கப்பல்களும் நாசமாக்கப்பட்டன).

தொழிற்சாலைகள், விமான நிலயங்கள்.—ஸார்டீனியாவிலுள்ள மான்ஸெராட்டோ (Manserrato).

விமானச் சண்டைகள்.—பான்டெல்லேரியா (Pantellaria)—(4 அச்சு விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

துறைமுகம்.—ஸார்டீனியாவிலுள்ள போர்ட்டோ ரொமானோ (Porto Romano).

விமான மிறங்குமிடங்கள்.—ஸார்டீனியாவிலுள்ள லெபோபெர்ரா (Lapoperra).

எதிரிக் கப்பல்கள்.—ஏஜியான் (Aegean) கடல், கிரீஸின் மேற்கு கரை.

### ருஷ்யா (Russia).

(29-5 43 முதல் 5—6—43 வரை முடியும் வாரத்தில் விமான நஷ்டம் ருஷ்யா 21 விமானங்கள்; அச்சுநாடு 752 விமானங்கள்).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

ஆருதிவிலுள்ள டோபோ (Dobo).
விமான நிலயம்.—அம்பாய்னு தீவிலுள்ள லாஹாக (Laha).
லேங்கோயர் (Langgoer).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.-காஹிலி (Kahili).
நாசகாரி.—பொகெய்ன்வில்லி (Bougainville) பிரதேசம்.
அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska) பர்மாவிலுள்ள ஆலன் (Alon).
ஜப்பான் இலக்குகள்.—பர்மாவிலுள்ள சாக், (Chauk), மாண்டலே (Mandalay).
கட்டடங்கள்.—பர்மாவிலுள்ள பாக்கன் (Paukkan).
வெட்லெட் (Wetlet).
சைனியங்கள் வசிக்குமிடம்.—முனிவா (Monywa).
ஜப்பானிய சைனியங்களில் மிஞ்சியவர்கள்.—சீனுவிலுள்ள ஒட்டு (Otu), சைனுவிலுள்ள இச்சாங் (Ichang).

**6—6—43.** (ஞாயிற்றுக்கிழமை).

### ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.-சுரங்க வேடிகளை அகற்றும் கப்பல்கள்.—டோவர் (Dover), ஜலசந்தி. (இரண்டு சுரங்கவெடி அகற்றும் கப்பல்கள் நாசமாயின).
ரயில்வே லக்ஷியங்கள்.—வடக்கு பிரான்ஸ்.

### இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரயில்ரோட் தளங்கள்.—ஸிஸிலியிலுள்ள மெஸ்ஸினு (Messina).
துறைமுகப் பிரதேசம்.—ரேகியோ டி கலாபிரியா (Reggio Di Calabria), ஸான் கயோ வன்னி (Saugiovanni), பான்டேல்லேரியா (Pantellaria) (2 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
ரயில்வே மத்திய ஸ்தலம்.—ஜெர்மனி ஆக்கிரமித்த ருஷ்யாவிலுள்ள யுனிச்சா (Unecha).

### தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—டச்சு டிமோரிலுள்ள கொபேங் (Koepang), பென்போகி (Ponfoci), (3 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன).
ஜப்பானியச் சைனியங்கள்.—சாய்ஸ் யூ (Choiseul) தீவு.
ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda), அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).
இலக்குகள் பர்மாவிலுள்ள கேலிம்யோ (Kalemyo).
விமான நிலயம்.—சைனுவிலுள்ள யோச்சோவிற்கருகில்.
ரயில்வே பாலம்.—சைனுவிலுள்ள புச்சி (Puchi).
விமான நிலயங்கள்.—இச்சாங் (Ichang).
சாமான் வண்டிகள்.-சீனுவிலுள்ள டாங்யாங் (Tangyang).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**1—6—43.** (செவ்வாய்க்கிழமை).

### பிரிடன் (Britain).

ஒரு நகரம்.—இங்கிலாந்தின் தென் கிழக்குக் கரை (5 அச்சு விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
மற்றொரு நகரம்.—இங்கிலாந்தின் தென் கரை.

### ருஷ்யா (Russia).

ருஷ்ய விமான நிலயங்கள்.—முன்னேறித் தாக்கும் அரண்களுக்குப் பின்னுல்.

**2—6—43.** (புதன்கிழமை).

### பிரிடன் (Britain).

இடங்கள்.-கிழக்கு ஆங்கிலியா (East Anglia). (1 எதிரி விமானம் நாசமாக்கப்பட்டது).

### ருஷ்யா (Russia).

குர்ஸ்க் (Kursk) (162 அச்சு விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**3—6—43.** (வியாழக்கிழமை).

### பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

### மத்தியதரைக்கடல் (Mediterranean).

மால்டா (Malta) (விமான எச்சரிக்கை மட்டும்).

### ருஷ்யா (Russia).

குபான் பிரதேசம் (Kuban). (3 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**4—6—43.** (வெள்ளிக்கிழமை).

### பிரிடன் (Britain).

ஒரு இடம்.—இங்கிலாந்தின் தென் கிழக்குக் கரை.

### மத்தியதரைக்கடல் (Mediterranean).

மால்டா (Malta), (ஒரு அச்சு விமானம் நாசமாக்கப்பட்டது).

### ருஷ்யா (Russia).

ருஷ்ய விமான நிலயங்கள் ஸப்ளை ஸ்தலங்கள்.—முன்னேறித் தாக்கும் அணிகளுக்குப்பின்.

**5—6—43** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

பிரிடனில் எதிரி விமான நடவடிக்கை ஒரு இடத்திலும் இல்லை.

**ருஷ்யா (Russia).**

விமானச்சண்டை.—குபான் (Kuban) தீபகற்பம்.

**6—6—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு நகரம்.—இங்கிலாந்தின் தென் கிழக்குக் கரை (ஒரு அச்சு விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது).

**ருஷ்யா (Russia).**

குபான் பிரதேசம் (Kuban).

**தூரக்கிழக்கு (Far East).**

வாவ் (Wau) விமான நிலயம்.—(ஒரு ஜப்பானிய விமானம் சுட்டுத்தள்ளப்பட்டது).

நகரங்கள்.—சீனுவிலுள்ள சங்கிங்கிற்கு அருகில் (Chungking).

**7—6—43.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு தகவலும் இல்லை.

**ருஷ்யா (Russia).**

கார்க்கி (Gorki).

**தூரக்கிழக்கு (Far East).**

சங்கிங்கிற்கு வடகிழக்கிலுள்ள லியாங்ஷான் (Liangshan).

---

# யுத்தக் குறிப்புகள்.

**டூனிஸிய வெற்றியின் முக்யத்வம்.** நாட்கள் செல்லச் செல்ல டூனிஸியா வெற்றியின் முக்யத்வம் அதிகமாகப் புலன்படுகிறது. மேமீ 29-ம் தேதி ஐரோப்பாவுக்கு ஆபிரிக்காவிலிருந்து ஜெனரல் ஈஸன் ஹவரும், பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸும் ஒலிபரப்பியபொழுது "டூனிஸியாவின் வெற்றியானது எதிரியின் மனோநிலையைக் குலைத்து விட்டதுடன், யுத்த தந்திரம் பூராவையும் மாற்றி விட்டதென்றும், சொன்னார்கள். நாம் முன்னேறித் தாக்க ஆரம்பித்துவிட்டோம். நேசநாடுகள் திடீர் தாக்குதல் முறைகளையும் கையாளலாம். யுத்த தந்திரத்திலும் யுத்த முறைகளிலும் பிரிடிஷ், அமெரிக்கத் துருப்புகள் அனுபவம் பெற்றுவிட்டதுடன் ஐரோப்பிய யுத்த அரங்கத்திலும் தங்களுடைய அளவற்ற சாதனங்களை ஒன்றுபடுத்தி உபயோகிக்கவும் கூடும்.

இன்னும் அநேக லாபங்கள் கிடைத்துவிட்டன. அதிருஷ்ட வசமாக அல்லது மனதாரவோ, "1 சண்டைக் கப்பல், 4 சஞ்சாரிகள், 3 நாசகாரிகள், 1 நீர்மூழ்கிக் கப்பல் கொண்ட அலெக்ஸாண்டிரியாவிலுள்ள பிரெஞ்சுக் கப்பற்படை நேசநாடுகள் வசமாகி விட்டது.

இரண்டாவதாக, டாஞ்ஜியரின் நிலைமை மாறுதலடைந்துவிட்டது. ரோமலின் படைகள் ஒரு பக்கமும், டாஞ்ஜியரில் ஸ்பானிஷ் துருப்புகள் மற்றொரு பக்கமும் இருந்தபொழுது ஆல்ஜியர்ஸிலுள்ள நேசதேசத்துருப்புகள் டாஞ்ஜியரிலிருந்து பின்பக்கம் தாக்கப்படுமோ என்ற பயமிருந்தது. டூனிஸியாவை நேசநாடுகள் கைப்பற்றியதிலிருந்து ஜெனரல் பிராங்கோ தன்னுடைய மனப்பான்மையை மாற்றிக்கொண்டுவிட்டான்.

மூன்றாவதாக, பிரெஞ்சு ஒற்றுமைப் பேச்சுகள் முடிவான நிலைமையை அடைந்துவிட்டன. ஜெனரல் டிகாலியும், ஜெனரல் கிராட்டும் ஆல்ஜியர்ஸில் சந்தித்துப் பேசிவிட்டார்கள். தேசீய ஸ்வதந்திரக் கமிட்டி ஏற்பாடு செய்யப்பட்டு அது பூரா நிர்வாக அதிகாரத்தையும் வகிக்கும். அதற்கு இருவரும் அக்கிராசனர்கள். பிரெஞ்சு குடியரசு திட்டம் மறுபடியும் அமுலுக்கு வரும் வரையிலும் உலக ஐக்கியபத்தியத்தில் பிரான்ஸும் தன்னுடைய ஸ்தானத்தை நிலைநாட்டிக்கொள்ளும் வரையிலும் இக்கமிட்டி யுத்தத்தை நடத்திவரும்.

வி வீ வி வீ வி

**இதாலி.** இதாலிக்குப் படையெடுப்பு கிலி பிடித்துவிட்டது. இதாலியப் பத்திரிகைகள் பீதியை வெளியிடுகின்றன. எந்த இடத்திலும், எத்தருணத்திலும் படையெடுப்பு ஏற்படுமென்று, எதிர்பார்க்கப்படுகிறது. ஜிப்ரால்டரில் 146 சாமான் கப்பல்கள் படையெடுப்புக்குத் தயாராகயிருக்கின்றனவென்று சொல்லப்படுகிறது. ஜெர்மன் வியாக்யானி சொல்லுவதுபோல் இதாலியின் நிலைமை மோசமாயிருக்கிறது. அதன் சாம்ராஜ்யம் போய்விட்டது. ஆள் பலத்திலும், தளவாட பலத்திலும் வலுவுள்ள எதிரி அதைத்தாக்கத்தயாராகயிருக்கிறான். பாண்டலேரியா பிடிபட்டவுடன், ஸிஸிலியும் விழுந்துவிட்டால் இதாலி அதோகதியடைந்து முறிபட்டு நமது வசமாகிவிடும். கதியற்று முஸோலினி மந்திரி சபையின் அங்கத்தினர்களையும் சேனைத்தலைவர்களையும் மாற்றியிருக்கிறான். முஸோலினி சொல்லுகிறபடி அச்சு நாட்டாருக்காக அவன் சண்டை செய்யவில்லை. இதாலிக்காகச் சண்டைபோடுகிறானாம்.

படையெடுப்பு இதாலியில் மட்டும் ஏற்படாது. டெயிலி எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் மிஸ்ட்டர் மார்பி ரிச்சர்ட்ஸ் எழுதியிருப்பது போல் பான்டலேரியா, ஸிஸிலி, ஸார்டீனியா தீவுகள் விழுந்துவிட்டால், ஐரோப்பாவை மூன்று இடங்களில் நேசநாடுகள் தாக்கலாம். இதாலியை ஆக்கிரமிப்பது ஒன்று, ஸார்டீனியா, ஸிஸிலி வழியாக தெற்கு பிரான்ஸில் படையெடுப்பது இரண்டு. இதாலியின் அடிபாகத்தின் மூலமாக யூகோஸ்லாவியாவையும், கிரீட் வழியாக கிரீஸையும் தாக்குவது மூன்றாவது.

ஸர் ஸ்டாப்போர்ட் கிரிப்ஸ் சொல்லுகிறபடி, வெற்றி நாடகத்தில் மற்றொரு அங்கம் ஆரம்பமாகப்போகிறது. ஆரம்பமாகும் நேரத்தை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். எதிரி தற்காப்பு யுத்தம் செய்வான். தாக்கலாயக்கான முக்கிய ஸ்தானங்கள் நம்வசமிருக்கின்றன. நாம் முன்னேறித்தாக்க ஆரம்பித்துவிட்டோம். எவ்விடத்தில் தாக்குதல் உண்டாகுமோ என்று எதிரி திகைத்து நிற்கிறான்.

முன்னேற்ற யுத்தத்தைவிட்டு தற்காப்பு முறையை எதிரி கையாளுவதற்கு ருஷ்யப் போர்முனை ஒரு அத்தாக்ஷியாகும். வசந்த காலம் சீக்கிரம் ஆரம்பமானபொழுதும் ஜெர்மானியர்கள் முன்னேற்ற யுத்தத்தை இதுவரையில் ஆரம்பிக்கவில்லை. டாக்டர் கோயபல்ஸ் சொல்லுகிறான் "கிழக்கு யுத்த முனையில் நமது தலைவரின் யோசனையைப்பற்றி நான் ஒன்றும் சொல்லமுடியாது. நமது தலைவர் அதைப்பற்றி அதிகமாகப் பேசமாட்டார். மௌனமென்றால் பீதி என்று பொருள்படும்—இதாலியின் இறுதி வீழ்ச்சியும் நாளுக்குநாள் அதிகரித்துவரும். பிரிடிஷ் விமானப்படையின் தாக்குதலும், ஜெர்மனி உத்தேசித்தபடி யூ படகுகளின் அட்டகாசம் பயன்படவில்லையென்பதும், எண்ணெய் சேமிப்புக்குக் குறைவும் ஐரோப்பியக் கடற்கரை பூராவும் தற்காப்பு செய்யவேண்டுமென்ற அவசியமும் சேர்ந்து எதிரியைக் கலக்குகிறது. ஆகையால் தற்காப்பு யுத்தம்தான் சிலாக்யமென்று ஜெர்மனி முடிவு செய்துவிட்டது. வரும் காலத்தில் ருஷ்யப் போர்முனையில் தற்காப்புக்காகமட்டும் சிறிய முன்னேற்ற யுத்தத்தை ஜெர்மனி நடத்துமென்று சொல்லக்கூடும். ஜெனரல் டிட்மார் சொல்லுகிறார் எதிரிகள்தான் முன்னேறித் தாக்கவேண்டும். தாக்க இயல்பு யாரிடமிருக்கிறதென்பது இப்பொழுது முக்கியமில்லை. எவர் முதலில் தாக்குகிறாரென்பதுதான் முக்கியம். டுனிஸியாவின் அனுபவத்தை ஒட்டி எதிரி இனிமேல் நம்மை அணுகமாட்டான்.

வி வி வி வி வி

**ருஷ்யா.** கோமிண்டர்னைக் கலைத்தசன் அர்த்தம், மற்ற நாடுகளின் உள்நாட்டுப் பொருளாதார, ராஜீய வியவகாரங்களில் ருஷ்யா தலையிடுவது இல்லையென்பதுதான் என்று நாம் சொன்னோம். ஸ்டாலின் இந்த மனப்பான்மையை வெளியிட்டது சிறந்த ராஜதந்திர முறையாகும். எதிரியின் பிரசாரம் வேறுபட்டதோடு, நேசநாடுகளுக்குள் நட்பு அதிகரித்துவிட்டது. ஸ்டாலினுக்கும், ருஷ்யாவுக்கும் கியாதி கிடைத்துவிட்டது. நவம்பர் மாதம் 7-ம் தேதி பேசியபொழுது வெற்றிபெற வேண்டுமென்றுதான் ஸ்டாலின் சொன்னார். கோமிண்டர்னைக் கலைத்துவிட்டதின் நோக்கங்களைப்பற்றி ஸ்டாலின் எழுதியிருக்கும் கடிதத்திலிருந்து உலக சமாதானத்துக்கு அவசியமான ருஷ்ய ஒத்துழைப்பையும் ஸ்டாலின் வாக்குறுதி செய்துவிட்டானென்று வெளியாகுகிறது. ஆங்கிலோ-ருஷ்ய ஒப்பந்தப்படி யுத்தத்துக்குப்பின் உண்டாகும் பொருளாதார நிலைமைக்கு அஸ்திவாரம் போடப்பட்டது. கோமிண்டர்னை ஸ்டாலின் கலைத்ததிலிருந்து யுத்தத்துக்குபின் ஏற்படும் உலகத்தில் ராஜீய ஒற்றுமைக்கும் அடிப்படை ஏற்பாடாகிவிட்டது.

வி வி வி வி வி

**யூபடகுகள்.** சென்ற சில மாதங்களாக யூ படகு தாக்குதல்கள் குறைந்துவிட்டன. நேசநாட்டாரின் அநேகக் கப்பல்கள் அட்லாண்டிக் சமுத்திரத்தை பத்திரமாகக் கடந்துவிட்டன. சென்ற வருஷத்தைவிட இந்த மாதங்களில் அதிகமான யூ படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. இதற்குக் காரணங்கள் துணைக்காவல்படைகளின் அதிகரிப்பும் பராக்ரமும், விமானப்படை ரோந்தும் துணைக்காவலும்தான். அட்லாண்டிக் சமுத்திர மத்தியில் பாதுகாப்பு இல்லாமை இப்பொழுது அகன்றுவிட்டது. இதன் மூலம் படையெடுப்புக்கு லாயக்குள்ள ஒரு பெரிய கடற்படை தயாராகிவருகிறது. அட்லாண்டிக் யுத்தத்தில் ஏராளமான வெற்றிகள் கிடைத்துவிட்டால் படையெடுப்புக்கு வேண்டிய கடற்படை அதிகரித்துவிடும்.

மிஸ்ட்டர் சர்ச்சில் லண்டன் வந்து சேர்ந்தார், அமெரிக்காவிலிருந்து ஜிப்ரால்டருக்கும் பிறகு ஆல்ஜியர்ஸுக்குச் சென்று அங்கே ஈசன் ஹவரையும், கிராட், டிகாலேயும் சந்தித்துப் பேசினார். மிஸ்ட்டர் ஈடனும் அங்கே சென்றிருந்தார். டுனிஸியா யுத்த களத்துக்குச் சென்று அங்கே கார்தேஜிலுள்ள புராதனமான அரங்கத்தில் 3,000 பேர்களுக்கு ஒரு சொற்பொழிவு

செய்தார். அவர்களுக்குக் கிடைத்த வெற்றியைப் பற்றியும் அவர்கள் அநேகரை கைதி செய்ததையும் பாராட்டிப் பேசினர்.

அட்டு வீழ்ச்சியிலிருந்து ஜப்பானுக்கு பயம் அதிகரித்துவிட்டது. ஜூன்மீ 2-ம் தேதி டோஜோ பேசும்பொழுது "நிலைமையை வர்ணிப்பது சாத்யமில்லை. அட்டுத்தீவில் மரணமடைந்த 2,000 ஜப்பானியர்களைப்போல ஒவ்வொரு ஜப்பானியனும் வெற்றிபெறுவதற்கும் தேசத்தின் கீர்த்தியை நிலைநாட்டுவதற்கும் எவ்வித தியாகமும் செய்யத்தயாராகயிருக்க வேண்டுமென்று சொன்னன்.

வி வி வி வி வி

**அரக்கான்.** பருவ காலம் வந்துவிட்டதால் இந்தோ பர்மா போர் முனையில் மழையும் மூடுபனியும் உண்டாகிவிட்டன என்று டைம்ஸ் பத்திரிகைக்காரர் எழுதுகிருர். தெற்கு பிரதேசத்தில் எதிர்பார்த்தபடி யுத்தம் முடிவடைந்துவிட்டது. நாம் நம்முடைய ஸ்தானங்களுக்கு வந்துவிட்டோம். ஜப்பானியர்கள் பூதேடாங்கையும், மாங்டாவையும் கைப்பற்றிவிட்டார்கள். ஆறு மாதங்களாகப் பலமாகச் சண்டை செய்ததின் பயனக சிட்டகாங்கையும் வங்காள மாகாணத்தையும் ஜப்பானியர்கள் வெடிகுண்டுகளால் தாக்குவது தடைபட்டதென்று நாம் சொல்லலாம். படை பலத்தையும், யுத்தத்தின் கடுமையையும் உத்தேசித்தால் நமக்கு ஆள் சேதம் சொல்பமென்று சொல்லவேண்டும். யந்திர பீரங்கிகள், சட்டி பீரங்கிகள் உபயோகத்தினல் ஏற்பட்ட நஷ்டத்தைவிட மலேரியா ஜுரத்தினல் இருதரப்பிலும் அநேகர் மறித்துவிட்டார்கள். இந்தப் பருவகாலத்தில் இந்த ஜுரம் அதிகமாகயிருக்குமாதலால் வரும் சிலமாதங்களில் அதிகத் துருப்புகளைக்கொண்டு யுத்தம் நடத்துவது சாவதானமில்லாதகாரியம்.

---

# டுனிஸியா : ஹிட்லரின் சூதாட்டம்.

(லெப்டினண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்).

டுனிஸியாவிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டியது அநேகம். முதலாவது, யுத்தமானது உலக யுத்தம் என்பது. இந்த வெற்றியானது உலகத்தின் யுனேநிலையை மாற்றுவதுடன், ஆபிரிக்காவின் வடக்குக் கரையைச் சுற்றிலும் அநேக மைல்கள் தூரத்தில் மாறுதல்களை வெகு துரிதமாகச் செய்யக்கூடும்.

மத்தியதரைக்கடலில் நமது கடற்படையும் துணைக்காவல் படையும் தாராளமாகச் செல்லலாம். நமது துறைமுகங்களிலிருந்து தூரக்கிழக்குக்கு 5,000 மைல்கள் தூரம் குறைந்துவிட்டது. பிரிடிஷ் காவல் படையின் பெரும்பாகம் அட்லாண்டிக் கடலில் செல்லும் சாமான் கப்பல்களுக்கு துணைக்காவலுக்கு அனுப்பப்படலாம். இந்த வெற்றியின் மூலம் அட்லாண்டிக்கில் சஞ்சரிக்கும் எதிரி யூ படகுகளுக்கு அதிகச் சிரமமும் உண்டாகிவிட்டது, எதிரியின் கடல் மார்க்கங்கள் 5,000 மைல்கள் குறைந்துவிட்டதென்று கண்டு ஜப்பானியர்கள் நடுங்குகிருர்கள்.

### கெடுதலான யோஜனை.

வெற்றி கிடைத்த ஸ்தலத்தைச் சுற்றியும் வெற்றியின் விளைவுகள் மிகுதியானவை. இரண்டாவது தடவை ஹிட்லர் சூதாட்டத்திலிறங்கித் தோற்றுவிட்டான். சூதாட்டம் கெட்ட நடவடிக்கை என்று நாம் அறிவோம். அது தாத்காலிகமான ஒரு ருசியில்லை. ஸ்டாலின்கிராட் தோல்வியின் படிப்பினையை ஹிட்லர் நன்கு உணர்ந்திருக்கவேண்டும். சந்தர்ப்பத்துக்கு மாறுன செய்கைகளை ஹிட்லர் நடத்துகிருனென்று அது ருஜு செய்துவிட்டது. இந்த துர் புத்தியை அவலம்பித்து குபானிலும் ஹிட்லர் யுத்தம் நடத்திவருகிருன்.

எதிரியைத் தீடீரென்று ஏராளமான துருப்புகளுடன் சரணடையும் படிக்குச் செய்துவிட்டோமென்பதில் நாம் மிகவும் சந்தோஷமடைகிரும். இதற்கு ஒரு முகாந்திரமும் ஹிட்லர் சொல்லமுடியாது. ஒன்று நிச்சயம். ரோமல் ஓடிவிட்ட பிறகு தங்களுடைய சர்வாதிகாரியின் முட்டாள்தனத்தை ஜெர்மன் தளகர்த்தர்கள் கண்டு கொண்டார்கள். தங்களை அதோகதியில் விட்டுவிட்ட ஒரு நிர்வாகத்துக்காகப் பாடுபடுவது தவறென்று அவர்கள் அறிந்தார்கள்.

### கேந்திர ஸ்தானத்தை ரக்ஷிப்பது.

ஐரோப்பாவில் எந்த இடத்தை நேசநாடுகள் முதலில் தாக்குவார்களென்று நான் கூறப்போவதில்லை. ஆனல் டுனிஸ், பிஸர்ட்டா போன்ற கூபான் பிரதேசத்தைப்பற்றி எழுத

விரும்புகிறேன். இந்த பிரதேசத்தில் மற்ருெரு கேந்திர ஸ்தானத்தைக் காப்பாற்ற ஜெர்மானியர்கள் முயற்சி செய்கிருர்கள். ருஷ்யர்கள் அதைக் கைப்பற்ற முயலுகிருர்கள். இந்தக் கேந்திர ஸ்தானங்களைக் காப்பாற்றுவது டொர்ராஸ் வெட்ராஸ் அரண்களை வெல்லிங்டன் ஆக்கிரமித்திருந்தது போலாகும். இந்த உபமானம் பொருத்தமாகாது. ஜெர்மானியர்களிடமில்லாத யுத்த தந்திரம் வெல்லிங்டனிடமிருந்தது. வெல்லிங்டன் ஒரு தேசத்துக்காகச் சண்டை செய்தான். கடற்படை உதவி பெற்றிருந்தான். அயல்நாட்டு கடற்கரையிலும் கடலையொட்டியிருக்கும் பிரதேசங்களிலும் சண்டை செய்யும் துருப்புகளுக்கு ஜெர்மனி கடற்படை வசதிகளை அளிக்கவில்லை.

நடப்பு யுத்தத்தில் கடல் மார்க்கங்களைக் காப்பாற்றுவதற்காக உபயோகப்படும் கப்பல்களுக்கு உதவியாக கடல் விமானங்கள் ஏற்பாடாகியிருக்கின்றன. இந்த விஷயத்தில் ஜெர்மனியின் ஆதிக்கம் அற்றுவிட்டது. ஆகையால் கடல் தாண்டி யுத்தம் செய்யும் துருப்புகளுக்கு—குபான் ஜெர்மானியர்களுக்குக் கடல் தாண்டியிருக்கும் பிரதேசம் தான்—ஜெர்மனியிலிருந்து ஸப்ளைகள் சரிவர வருவதும், தோல்வி ஏற்பட்டால் தப்பி ஓடுவதும் கஷ்டமானவை. ஆகையால் டாரிஸ்வெட்ராஸைவிட குபான் நடவடிக்கை பெரிய சூதாட்டம்.

## ஜெர்மன் தோல்விகளுக்கு சின்னங்கள்.

ஜெர்மனியின் வருங்காலத் தோல்விகளுக்கு னேஸியாவும், பிஸர்ட்டாவும் பிடிப்பட்டது அறிகுறியாகுமென்று லண்டனிலுள்ள வியாக்யானிகள் அபிப்பிராயப்படுகிருர்கள். இந்த வீழ்ச்சிகளுக்கு 48 மணிகளுக்கு முன்னுல் ஜெர்மனி இயற்கையான வலுவுள்ள ஒரு பிரதேசத்தில் தங்கியிருந்தார்கள். இவர்களுக்குப் பின் பலமாக ஒரு கோட்டையிருந்தது.

நாம் சில வாரங்களாக சாவதானமாக எதிர்த்து வந்தோம். நம்முடைய முன்னேற்றமும் மெதுவாக நடைபெற்றது. ஆகிலும் நம்முடைய தாக்குதலின் வலிமை அதிகமானது. எதிரிக்கு வரும் ஸப்ளைகளைக் குறைப்பதிலும் நாம் தீவ்ரமான நடவடிக்கை எடுத்து வந்தோம். இவ்விரண்டும் சேர்ந்து எதிரிக்கு வரும் முக்கியமான சாமான்களும், முஸ்தீப்புகளும், யுத்த தளவாடங்களும் குறைந்ததுவிட்டன. எதிர்த்து நிற்கும் சக்தி குறைந்து மனுேதைரியமும் குன்றிவிட்டது.

பலமாக எதிர்த்து நிற்பது போலும், முரட்டுத்தனமாய் பதில் தாக்குதல் செய்வது போலும் பாசாங்கு செய்தபோதிலும் ஜெர்மானியர்கள் நிலைகுலைந்து விட்டார்களென்று தான் நினைக்கவேண்டும். மாஸிகால்டில் டாங்குப்படை செய்த ஒரு தாக்குதலே அவர்களை நர்சமாக்கிவிட்டது. எதிரியின் எதிர்ப்பு எதிர்பாராதபடி திடீரென்று பூராவாகவும் சீர்கெட்டுவிட்டது. வலுவான பிஸர்ட்டா அரணையும் எதிரி காப்பாற்ற முடியவில்லை. இந்த அரண்களும் அவைகளைச் சுற்றிலுமுள்ள வெளிகளும் பலமானவை தான். எதிரியின் பலஹீனத்திஞல் அவைகளை அவன் ரக்ஷிக்க முடியவில்லை.

### கடினமானது ஆனுல் அல்பமானது.

யுத்தத்தில் இவ்விதமான அநேக தோல்விகள் எதிரிக்கு நேரிடுமென்று லண்டனில் அபிப்பிராயப்படுகிருர்கள். பலமான எதிர்ப்புக்குப் பின் மெதுவான நாளடைவில் வலிமை குன்ருது திடீரென்று வீழ்ச்சி ஏற்படும்.

ஜெர்மானியர்கள் எப்பொழுது வீழ்ச்சி பெறுவார்களென்று சொலலமுடியாது. கடுமையாகச் சண்டை செய்த பிறகுதான் அவர்கள் தோல்வியடைவார்களென்பது மட்டும் நிச்சயம்.

யுத்த ஆரம்பத்தில், ஜெர்மன் எதிர்ப்பு பலமாயிருக்கும். ஆனுல் உபயோகமில்லாதது என்று புத்திசாலிகள் அபிப்பிராயப்பட்டார்கள். இந்த அபிப்பிராயத்தை டுனிஸியா வீழ்ச்சி உண்மையாக்கிவிட்டது.

## ஜப்பான் ஜெர்மனியை ரக்ஷிக்க முடியுமா ?

### (லிபரேட்டர் எழுதியது).

அச்சு நாடுகளின் முதல்தரமான நடவடிக்கை வெளியாகவில்லை. சென்ற வேனிர் காலத்தில் ரோமலும் ஜப்பானியர்களும் மத்தியக்கிழக்கு நாடுகளைப்பிடிக்கத் தயார் செய்து

வந்தார்கள். ஜப்பானியர்கள் இந்துமகா சமுத்திர மார்க்கமாக வரவேண்டியது. ரோமல் ஸூயஸ் கால்வாயைத் தாண்டவேண்டியது. இந்தயுத்த தந்திரப்படி வான்க்ளீஸ்ட் காகஸஸைப்பிடித்து விடவேண்டியது.

ஆனால் அச்சுப்படைகள் ஒன்று சேரமுடியவில்லை. இந்து மகா சமுத்திரத்தில் ஜப்பானுடைய முயற்சி பயன்படவில்லை. அலெக்ஸாண்டிரியாவுக்கும் ரோமலுக்கும் உள்ள 60 மைல்கள் பிரதேசத்தை ரோமல் பிடிக்க முடியவில்லை. இப்பொழுது இறந்துவிட்ட வான்க்ளீஸ்டின் காகேஸியத் துருப்புகள் உயிர் தப்பிக்க தலைவிரிகோலமாக பின் வாங்குகின்றன. இரண்டு போர்முனைகளுக்குமிடையே 3,000 மைல்கள் தூரமுள்ளதும் வெகு தூரத்திலுள்ள மூன்று போர்முனைகளிலும் நேசநாட்டாருக்கு மகத்தான வெற்றிகள் எதிர்பாராதபடி கிடைத்துவிட்டன.

## அறிய சந்தர்ப்பம்.

வேவலின் அதிகாரத்துக்குட்பட்ட இந்தியப் படையின் திடமும், அலெக்ஸாண்டர்—மாண்ட் காமரியின் ஒன்றுபட்ட தலைமையின் கீழுள்ள எட்டாம் படையின் முன்னேற்ற யுத்தமும், ஸ்டாலின்கிராட் காகஸஸின் தீரமான தற்காப்பும், எல்லாம் சேர்ந்து நான்கு மாதத்துக்கு முன்னிருந்த கவலைக்கிடமான நிலைமை மாறி நேசநாடுகள் ஒன்றுபட்டு ஒரே சமயத்தில் பல இடங்களில் தாக்குவதற்கு அறிய சந்தர்ப்பத்தை அளித்துவிட்டது. இம்மாதிரி ஏற்பட்டிருக்கும் நிலைமையை நாம் பெருமையுடன் வரவேற்கிறோம். ஆகிலும் அதன் முக்கியமான தத்துவங்களையும் அறியாமல் இருக்கக்கூடாது. நடப்பு யாதெனில், ருஷ்யர்கள் அதிக முரட்டுத்தனமாகவும் தீர்க்கமான முன்யோசனையுடனும் நின்று போர் புரிந்திருக்கிறார்கள். அத்துடன் எவ்விதத்திலும் எட்டாம் படை முன்னேறித் தாக்குவதற்குத் தேவையான சாதகங்களை அமைத்துவிட நாமும் ஊக்கம் கொண்டோம். இந்தச் சங்கடமான நிலையில் ஜப்பானியர்கள் சும்மாவிருந்து விட்டார்கள். ஆகையால் குறிப்பிட்ட ஒரு திட்டத்தின் மூலமாக இந்த சந்தர்ப்பம் நமக்கு ஏற்பட்டுவிடவில்லை. அதிருஷ்ட வசமாக பல சந்தர்ப்பங்களின் ஒற்றுமையினால் இது ஏற்பட்டிருக்கிறது. ருஷ்ய எதிர்ப்பு யுத்தம் ஆரம்பித்தது. பிரிடன் எகிப்து யுத்தத்தை நடத்தியது. அமெரிக்கா வடமேற்கு ஆபிரிக்கா மீது படையெடுக்கும் திட்டத்தை ஏற்பாடு செய்தது. இந்து மகா சமுத்திரத்தில் ஜப்பான் தன்னிச்சையாகவே வெகு காலமாக நடவடிக்கை ஒன்றும் நடத்தவில்லை.

ஆகிலும், இம்மாதிரியான பல்வேறு திட்டங்களிலிருந்தும் தனிப்பட்ட நடவடிக்கைகளிலிருந்தும் நேசநாடுகளுக்கு இப்பொழுது ஒரு முக்கியமான சந்தர்ப்பம் வாய்த்து விட்டது. மத்தியக்கிழக்கில் ஜப்பானுடையவும், ஜெர்மனியுடையவும் துருப்புகள் ஒன்று சேர்ந்துவிடுமென்ற பயம் நீங்கி, நேசநாடுகளும் ருஷ்யாவும் ஒன்றுபட்டு யுத்தம் செய்வதற்கு சந்தர்ப்பம் உண்டாகிவிட்டது. இருதேசத் துருப்புகளும் சேரும் இடமானது ஹிட்லரின் ஐரோப்பியக் கோட்டையின் இருவிலாப்பக்கங்களிலுமுள்ள ஸ்காண்டினேவியாவிலும் பால்கன் நாடுகளிலும் ஏற்படலாம்.

இம்மாதிரி சம்பவிக்கும் என்பதை நம்மைவிட எதிரி நன்றாய் பல முறைகளிலும் அறிந்திருக்கிறான். ஆகையால் ஜெர்மனியைவிட சுயேச்சையாக நடமாடக்கூடிய அச்சு நாடுகளில் ஒன்றாகிய ஜப்பான் பேரில் ஜெர்மனி கவனம் செலுத்துகிறதென்பதில் ஒரு ஆச்சரியமும் இல்லை. ஹிட்லரின் ஐரோப்பிய அரணை அடைய நேசதேசத்தார்களின் முயற்சி அதிகரித்து வரும்பொழுது, நேசநாடுகளின் முயற்சிகளை வேறு பக்கம் திருப்பி சின்னாபின்னம் செய்வது ஜப்பானின் பொறுப்பாகும் என்பதுதான் ஜெர்மனியின் முக்கியமான யுத்த தந்திரமாகும்.

நாம் சம்பந்தப்பட்ட மட்டில் அச்சுநாடுகளில் ஒன்றான ஜப்பான் என்ன நடவடிக்கைகளை நடத்தப்போகிறது என்பதை அறிந்து கொள்ளவேண்டும். நமக்குக் கிடைத்திருக்கும் சௌகரியமான நிலைமையைப் பயன்படுத்திக் கொள்ளுவதற்கு இது அத்தியாவசியமாகும்.

ஐரோப்பாவிலுள்ள கூட்டாளிகளைப்பற்றி ஜப்பான் சிறிதும் கவலைப்படவில்லை என்று சிலர் சொல்லுகிறார்கள். சரியான ஹேஷ்யங்களிலிருந்து தப்பான முடிவுக்கு வந்தது போலிருக்கிறது. ஜப்பானின் அக்கரைக்கு விரோதமாக நடந்துகொள்வது ஜப்பானின் கொள்கையல்ல. ஆகையால் ஜப்பானுடைய சிநேகிதர்களின் திருப்திக்காக யாதொரு அபாயத்திலும் ஜப்பான் இறங்கிவிடாது. ஆகிலும் ஆசியாவில் ஜப்பானுடைய ஆதிக்கத்தை எதிர்க்கக்கூடிய இரண்டு கடற்படை கொண்ட வல்லரசுகளும் தரைப்படை கொண்ட ஒரு வல்லரசும் ஐரோப்பாவில் வெற்றியடையக்கூடாதென்று நினைப்பதும் ஜப்பானுடைய அக்கரைக்கு ஒத்ததாகும். இம்மட்டில் ஜெர்மனி வெற்றிபெறவேண்டுமென்று ஜப்பான்

நினைத்துவருகிறது. ஆகையால் நேசநாடுகள் ஜெர்மனியை முறியடிக்காதபடி செய்ய வேண்டுவதில் எவ்வித முயற்சியும் செய்ய ஜப்பான் தயாராகயிருக்கிறது. ஆகிலும் பிரிடனுடனும் அமெரிக்காவுடனும் ஜப்பான் யுத்தம் ஆரம்பித்தபொழுது எவ்வளவு ஜாக்கிரதையாக நடந்துகொண்டதோ அதேவிதமாகத் தன்னுடைய அலுவல்களை இப்பொழுதும் நடத்திவரும்.

## ஜப்பானின் திட்டங்கள்.

ஜப்பானின் திட்டங்கள் நமக்கு புலப்படுகின்றன. அவை பின்வருமாறு :—

ருஷ்யவைப்போல மூன்று மடங்கு, அதாவது 400 மிலியன் ஜனத்தொகையுள்ள ஆசியாவை ஜப்பான் அரசாளுகிறது என்பதுதான், ஜப்பானின் முதலாவது திட்டம். இவ்வளவு மனிதபலத்தை வைத்திருந்தபோதிலும் ஜப்பானியர்களின் திட்டப்படி ஜப்பானியச் சேனை விசேஷமாக விருத்தியடையவில்லை. பெர்ல் துறைமுகம் தாக்கப்பட்டபொழுது இருந்ததுபோல் சேனை பலமிருக்கிறது. அதாவது 100 டிவிஷன் துருப்புகள்—20 லக்ஷம் ஜனங்கள். இந்த 100 டிவிஷன்களில் சென்ற ஏப்ரல் மாதத்திலிருந்து ஒரு சிறிய பாகம் தான் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறது. சேனையைச் சேர்ந்தவர்கள் ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளில் தொழிற்சாலைகளிலும், கிருஷி செய்வதிலும், ரஸ்தாக்கள் அமைப்பதிலும் தொண்டு செய்கிறார்களென்பது வாஸ்தவம். யுத்தத்தில் ஏற்பட்ட ஓய்வு நேரத்தில் தொழிற்சாலைகளிலிருந்து ஏராளமான சாமான்களை உற்பத்திசெய்ய ஜப்பான் முயன்று வருகிறதென்று ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது.

ஆகிலும் ஜப்பானின் உற்பத்திகள் அமெரிக்கா, பிரிடன் இவ்விரண்டு நாடுகளின் யுத்த முயற்சிகளோடு ஒப்பிடவே முடியாது, அப்படிச் செய்ய முயலுவது முட்டாள்தனம். யுத்த தந்திரத்திலும் யுத்த முறைகளிலும் ஜப்பான் ஒரு முக்கியமான குணத்தை வெளிக் காட்டி இருக்கிறது. அவர்கள் மேல் நாட்டாரிடமிருந்து சிலவற்றை கற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களைப் பின்பற்றவில்லை. பஸிபிக் சமுத்திரத்திலும், அதன் தீவுகளிலும் அதன் கடற்கரைகளிலும் யுத்தம் செய்வதன் கிரமங்களை அறிந்து அதற்குத் தகுந்தபடி அவர்கள் தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். இதை விர அச்சுநாடுகளுக்கும், முக்கியமாக ஜப்பானுக்கும் குறைவுபட்டிருந்த முக்கியமான இயற்கைப் பொருள்கள் ஜப்பானுக்கு ஏராளமாகக் கிடைத்துவிட்டன. யுத்தத்தில் தயையன்னியில் சண்டைபோடும் மனப் பான்மையும் ஜப்பானிடமிருக்கிறது. இவையெல்லாம் சேர்ந்து வரப்போகும் நாளில் நடைபெறப்போகும் யுத்தத்தை நடத்த ஜப்பான் தன்னுடைய பொருளாதார நிலைமையை அபிவிருத்திசெய்யப் போதுமான முயற்சி செய்யுமென்றும் தோன்றுகிறது.

## ஹிட்லரின் அவசரத் தேவை.

ஸாலமன்ஸிலும், நியூ கினியாவிலும் ஜப்பான் கடுமையான யுத்தம் நடத்திவருகிறது. இந்த யுத்தத்தை ஜப்பான் டம்பமாக நடத்தவில்லை. ஜப்பானுடைய ஆட்சிக்குட்பட்ட 400 மிலியன் ஜனங்கள் வசிக்கும் பிரதேசங்களைச் சுற்றிலும் உள்ள இந்தத் தீவுகளை ரக்ஷிப்பதில் எவ்வித தியாகத்தையும் செய்ய ஜப்பான் தயாராக இருக்கிறது. ஆகிலும் தன்னுடைய லாபங்களைப் பயன்படுத்தி ஒன்றுபடுத்தும்வரையில்தான் இந்த யுத்தம் நடைபெறக்கூடும். மத்தியக்கிழக்குக்கு ஜெர்மனி வந்துவிடுமென்ற நம்பிக்கை போய்விட்டபின் இந்தத் தீவுகளுக்குப் பின்னால் ஜப்பான் பத்திரமாக ஜீவித்திருக்கமுடியாது. மறுபடியும் வெற்றிபெறுவதற்கு ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் நேசநாடுகளுக்கு தளமாகயிருக்கும்வரையிலும் ஜப்பான் பத்திரமாக வசிக்கமுடியாது.

ஐரோப்பாவைப் படையெடுப்பதற்கு லாயக்குள்ள நேசதேசப் படைகளை தயாரிப்பதற்குச் சாதகமான கப்பற்படையை நேசதேசத்தார்கள் ஒன்றுகூட்டாமல் செய்வதுதான் வரப்போகும் ஆறு மாதங்களில் அச்சுநாடுகள் செய்யப்போகும் முக்கியமான யுத்தம். யூ படகுகள் ஏராளமாக நடமாடிக்கொண்டிருக்கும் சமயத்தில் நேசநாட்டு கடற்படைக்கு இரண்டாம் போர்முனை ஏற்படுத்துவதுதான் ஜெர்மனிக்கு அவசியமாகும். இதற்கு ஜப்பானுடைய உதவி வேண்டும். நேசநாடுகள் ஐரோப்பிய யுத்தத்தை முதலில் நடத்துவதென்று முடிவுசெய்ததும் சரிதான். பஸிபிக் மகா சமுத்திரத்திலுள்ள துருப்புகள் சிக்கனமான முறையில்தான் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் இந்தியாவையோ, ஆஸ்திரேலியாவையோ ஜப்பான் பலமாகத் தாக்கினால்தான் நேசதேசக் கடற்படை, சேனைகள் இவைகளின் பங்கீடுகள் கலைபடும்.

அடுத்துவரும் எட்டு மாதங்களில் ஏற்படும் சங்கடமான நிலைமையை ஜெர்மனி தாண்ட வேண்டும். இதற்கு காலப்போக்கு அவசியம். ஜப்பானிடம் அது நம்பிக்கை வைத்திருக்கிறது. முன்னேற்ற யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் நேசநாடுகளை ஜப்பான்தான் கொஞ்ச காலத்துக்கு தேக்கமுடியும். ஜுகாவ், மாண்ட்காமரி, அலெக்ஸாண்டர், கன்னிங்காம், வேவல், ஈசன்ஹவர் எல்லோரும் நேசதேச வலிமையைப் பயன்படுத்திவருகிறார்கள். ஐரோப்பாவில் நாம் கவனம் செலுத்திவரும்பொழுது டிரிபோலிக்கும் திருகோணமலைக்குமுள்ள சம்பந்தத்தையும் நாம் கவனித்துவரவேண்டும். ஜெர்மனி உதவிக்காக ஜப்பானை நாடுகிறது. இது கிட்டாதபடி நாம் செய்துவிடுவோம். ஜெர்மனிக்குத் தேவையான கால தாமதம் ஏற்படாமல் நாம் நடந்துகொள்ளுவோம்.

---

## ஏழு கடலிலும் சண்டை.

### ஒரு வருஷத்திற்கு முன்பு.

விமானத்திலிருந்து வேவு பார்த்தலும் இன்னும் தரைமேல் வேவு பார்த்தலும், சரியானபடி நடக்க ஆரம்பிக்கவில்லை. நேசதேசக் கப்பல்களை கார்பியன் கடலிலும், அமெரிக்காவின் கிழக்கு கரைகளிலும், எதிரியின் யூ படகுகள் மிகவும் அதிகமாக நாசப்படுத்தின.

1942-ம் வருஷம் முதல் நான்கு மாதங்களில் மொத்தமாய் 22,17,300 டன் நிறையுள்ள 352 நேசக் கப்பல்களை மூழ்கடித்ததாக பெர்லின் ரேடியோவில் சொல்லப்பட்டது.

அமெரிக்கக் கப்பல் தளங்கள் மொத்தமாய் 8,87,390 டன் நிறையுள்ள 106 புதுக் கப்பல்களை முதல் நான்கு மாதங்களிலே கட்டியது. நேசநாட்டுடையதும், கனடாவுடையதும் கப்பல் கட்டும் எண்ணிக்கை அதிகமாயும், மூழ்கடிக்கப்பட்ட கப்பலின் எண்ணிக்கை, ஜெர்மானியர்கள் சொல்லியதைவிட குறைவாயும் இருந்தாலும், மூழ்கடிக்கப்பட்ட அளவு நம்மால கட்டமுடியவில்லை.

மால்டாவிற்கு துணைக்காவலோடு கூடிய கப்பல் கூட்டம் சென்ற தன்னியில், ருஷ்யா, மத்தியக்கிழக்கு, தூரக்கிழக்கு இவைகளுக்கு செல்லும் நேசதேச வியாபாரக் கப்பல்கள் தாங்கள் செல்லும் குறுக்குப்பாதையான மத்தியதரைக்கடலில் செல்லமுடியவில்லை.

### இப்பொழுது.

நேசக் கட்சியின், கப்பல், விமானம் இவைகளின் அதிகமான உற்பத்தியினால் கப்பல்கள் ஆகாய விமானத் துணையோடும் இன்னும் இதர கப்பல் துணையோடும் செல்லுகின்றன. வடக்கு அட்லாண்டிக் முழுவதிலும் பத்திரமாகக் கப்பல் பிரயாணம் செய்யுமாறு அத்தனை அளவு ஆகாய விமானங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

யூ படகுச் சண்டையில் கெட்டிக்காரனான "டோனிட்ஸ்" ஜெர்மன கப்பற்படையில் தளகர்த்தன் வந்தும்கூட யூ படகுகளை அதிகப்படுத்தியும்கூட, 1943-ம் வருஷ முதல் நான்கு மாதங்களில் மொத்தத்தில் 24,48,600 டன் நிறையுள்ள 383 கப்பல்களைத்தான் சேதப்படுத்தியதாக பெர்லின் ரேடியோவே கூறுகிறது.

அமெரிக்கக் கப்பல் கட்டும் தளங்கள், முதல் நான்கு மாதங்களில் இழந்த கப்பல்களையன்றி, பெர்லின் ரேடியோ பொய்யாகக் கூறிய எண்ணிக்கையும் சேர்த்தும், மொத்தத்தில் 3,800,720 டன் நிறையுள்ள 539 புது கப்பல்களைக் கட்டிவிட்டிருக்கிறது. 9 மாதங்களுக்குமுன் இருந்ததைவிட நேசநாட்டு வியாபாரக் கப்பல்கள் மொத்தத்தில் 30 லக்ஷம் டன் நிறையுள்ள வியாபாரக் கப்பல்களை அதிகமாய் கொண்டிருக்கிறது. அமெரிக்கக் கடற்படை தளகர்த்தரான அட்மிரல் கிங்கும், அமெரிக்கக் கடற்படை மந்திரியான கர்னல் நாக்ஸும், 1943-ம் வருஷம் வேனிற்காலத்திற்குள் எதிரியின் யூ படகுகளை முற்றிலும் வெல்லமுடியும் என்று நம்புகிறார்கள்.

அமெரிக்காவிலிருந்த அச்சுநாட்டின் கடைசிசேனையையும் விரட்டியபின், மத்தியத்தரைக்கடல் முழுவதும், ஆகாய விமானங்களின் துணைகொண்டு கப்பல்கள் கடலில் செல்ல இப்பொழுது முடியும்.

### ஒரு வருஷத்திற்கு முன்பு.

1942-ம் வருஷம் ஜூன் மாதம் அலூஷியன் தீவுகளிலுள்ள அட்டு, கிஸ்கா ஆகிய இரண்டு இடங்களையும் ஜப்பானிய சைனியங்கள் பிடித்துக்கொண்டன.

1942-ம் வருஷம் ஏப்ரல் மாதம் ஜப்பானிய கப்பற்படை வங்காள வளைகுடாவில் வந்து சிலோன், கோகனடா, விசாகப்பட்டனம் ஆகிய நகரங்களின் மேல் குண்டுகள் போட்டன. மே மாதத்தில் மற்றொரு படை கோரல் கடலில் வந்து வடமேற்கு ஆஸ்திரேலியாவின்மீது குண்டுகளைப் போட்டது. ஜூன் மாதத்தில் மத்திய பஸிபிக்கிலுள்ள மிட்வே தீவுகளின் மேல் ஒரு கப்பற் கூட்டத்தை ஜப்பானியர்கள் அனுப்பினார்கள்.

### இப்பொழுது.

1942-ம் வருஷம் மே மாதம் அமெரிக்கப் படைகள் அட்டுவில் இறங்கியிருக்கின்றன. மால்டா விமானத் தாக்குதலுக்குட்பட்டது போல சில மாதங்களாக கிஸ்காவும் விமானத் தாக்குதலுக்கு உட்பட்டிருக்கிறது.

1943-ம் வருஷம் பிப்ரவரி மாதம், ஸாலமன்ஸிலுள்ள முக்கியமான விமான தளமான கூடல் கனாலை விட்டு ஜப்பானியர் காலியாக வேண்டியதாயிற்று.

பேராசை பிடித்த ஜப்பானிய தளகர்த்தர்கள், 6 விமானந்தாக்கி கப்பல்களை இழந்ததால் அப்படியே திணறுகிறார்கள்.

6 மாதங்களுக்குமுன் 2 விமானந்தாங்கிக் கப்பல்கள் ஸாலமன்ஸில் மூழ்கடிக்கப்பட்டதிலிருந்து ஜப்பானிய பெரிய யுத்த கப்பல்களை காணுவதேயில்லை.

222 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டோ, அமெரிக்க ஸப்மெரின்களால் நாசமாக்கப்பட்டோ, ஜப்பானிய வியாபாரக் கப்பல்களின் எண்ணிக்கை, கடல்கடந்து செல்லுவதற்குப் போதுமான அளவின்றி குறைந்துபோய் விட்டதால் ஜப்பானியர்கள் தங்கள் படையெடுப்பை நடத்தவில்லை.

---

## நேசதேச விமானத் தாக்குதல் அதிகமாகிக்கொண்டு வருகிறது.

### சென்ற வருஷத்தில்.

லூபெக், ராஸ்டாக், கொலோன் ஆகிய நாஸி நகரங்களின்மேல் படையெடுத்து குண்டு போட்டதினால், கோயரிங் திரும்பவும் நேசக் கக்ஷியினரைப் பழிக்குப் பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இங்கிலாந்தின் பெரிய மாதாகோவில்கள் உள்ள நகரங்களின் மேல் படையெடுத்தான். இதுதான் பழிக்கு பழி வாங்குவதாம்.

லூபெக்கின் மேல் 1942-ம் வருஷம் மார்ச்சு மாதம் 28-ம் தேதி ராயல் விமானப்படை நிமிஷத்திற்கு 2 டன் அளவாக 340 டன் குண்டுகளைப் போட்டது.

ஜெர்மனியின் லக்ஷியங்களின்மேல் போடப்பட்ட கனமான குண்டுகளின் நிறை 4,000 பவுண்டுகளாகும்.

ராயல் விமானப்படை கடலில் சொல்பமாக சுரங்க வெடி பாவினர்.

### இப்பொழுது.

ராயல் விமானப்படையெடுப்பு ஜெர்மனியின் மேல் மிகவும் அதிகமாய் இருப்பதால் ஜெர்மனியின் பழி வாங்கும் எண்ணத்தோடு வரும் படையெடுப்புக்கள் எல்லாம் சிறிதும் பயனில்லாமல் போகின்றன. அதுவே போலத்தான் அதைப்பற்றி அவர்கள் செய்யும் பிரசாரங்களும் நம்பப்படுவதில்லை.

1943-ம் வருஷம் ஏப்ரல் 26-ம் தேதி டூயிஸ்பார்க் என்னும் நகரின் மேல் நிமிஷத்திற்கு 30 டன் அளவாய் 1,360 டன் நிறையுள்ள குண்டுகளை ராயல் விமானப்படை வீசியது.

ஜெர்மனியின் லக்ஷியங்களின் மேல்போடப்பட்ட கனமான குண்டுகளின் நிறை 8,000 பவுண்டுகளாகும்.

1943-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் சேர்ந்தாற்போல் 27,28 ஆகிய இரண்டு நாட்களில் இரவுகளில் சாதாரணமாக ஒரு மாதத்தில் போடக்கூடிய அளவிற்கு மேற்பட்டு, எதிரிகளின் ஜலப்பிராந்தியங்களில் சுரங்க வெடிகள் போடப்பட்டது.

| சென்ற வருஷத்தில். | இப்பொழுது. |
| --- | --- |
| பிரிடனின் தளங்களிலிருந்து அமெரிக்க விமானங்களின் நடவடிக்கை ஏதும் ஏற்படவே இல்லை. | 1942-ம் வருஷம் ஜுலை மாதம் முதல் அமெரிக்க விமானங்கள் பிரிடனிலிருந்து விமான நடவடிக்கைகள் நடத்துகின்றன. பகல்களிலேயே அவைகள் ஜெர்மனியை மிகவும் கடுமையாகத் தாக்கி குண்டுகள் போடுகின்றன. நாஸிகளுக்கு இது ஒரு புது அனுபவமாகும். |
| 1941-ம் வருஷம் அமெரிக்கா சராசரி மாதத்திற்கு 1,500-வீதம் ஆகாய விமானங்களைக் கட்டிற்று. | 1942-ம் வருஷத்தில் சராசரி மாதத்திற்கு 4,000 விமானங்கள் கட்டப்பட்டன. 1943-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் 6,200 விமானங்கள் அமெரிக்கத் தொழிற்சாலைகளில் கட்டப்பட்டன. |
| 1941-ம் வருஷத்தில் அமெரிக்காவில் கட்டப்பட்ட விமானங்களின் நிறைமொத்தத்தில் 87,000,000 பவுண்டுகளாகும். | 1942-ம் வருஷத்தில் அமெரிக்காவில் கட்டப்பட்ட விமானங்களின் நிறைமொத்தமாய் 29,10,00,000 பவுண்டுகளாகும். 1943-ம் வருஷத்தில் 91,10,00,000 பவுண்டுகள் நிறையுள்ளதும், 1944-ம் வருஷத்தில் 14,170,00,000 பவுண்டுகள் நிறையுள்ளதுமாக விமானங்கள் கட்டப்படும் என்று அளவிடப்பட்டிருக்கிறது. கனமான குண்டு போடும் விமானங்கள், சென்ற வருஷத்தைவிட இவ்வருஷத்தில் பிரிடனில் $3\frac{1}{2}$-பங்கு அதிகமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. |
| 1942-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 27-ம் தேதி ஜோவாகிம் வான் ரிப்பன்ட்ராப் "ஐரோப்பாவைத் தாக்குவதற்கு பிரிடனிலே சேர்த்து வைத்திருக்கும் ஆகாய விமானங்களையும், பிரிடனையும் முடிவாக நாசப்படுத்தப்படும் நாள்வரும்" என்று கூறினார். | அச்சுநாட்டினரை வட ஆபிரிக்காவில் நீர்மூலப்படுத்தி ஐரோப்பாவைத் தாக்குவதற்கு டுனிஸியாவும் பிரிடனைப்போல் ஒரு விமான தளமாக ஆய்விட்டது. எதன்மேலும் நாஸிகள் முடிவாக ஏதும் செய்ததாக யாதொரு விதமான சின்னமும் இல்லை. |
| இதாலி அடிக்கடி தாக்கப்படவில்லை. எல் அலமீனிலிருந்து மாண்ட் காமெரி முன்னேறிய முதல் ஐந்து வாரங்களிலும் பிரிடனிலிருந்து நம் ராயல் விமானப்படை வடக்கு இதாலியின்மேல் வாரத்திற்கு 300 டன் நிறையாக குண்டுகள் போட்டன. | 1943-ம் வருஷம் மே மாதம் 9-ம் தேதி 400 நேசதேச குண்டு போடும் விமானங்கள் வடக்கு ஆபிரிக்காவிலிருந்து, ஒரே தாக்குதலில் ஸிஸிலியிலுள்ள துறைமுகமான பாலர்மோவின் மேல் 450 டன் நிறையுள்ள குண்டுகளைப் போட்டன. "முன் இதாலியென்று சொல்லப்பட்டதும், இழிவானதும் ஜெர்மனிக்குஅடிமையானதுமான ராஜதானியும் நம் விமானத் தாக்குதலுக்கு உட்படும்" என்று 1941-ம் வருஷம் ஜுலை மாதம் 14-ம் தேதி சர்ச்சில் உறுதியாய்ச் சொன்னார். இதாலி விமானத் தாக்குதலுக்கு இப்பொழுது உட்பட்டிருக்கிறது. |

---

## சியானோ பிரபு.

வழவழப்பான நேர்த்தியான சுருக்கமில்லாத முக அமைப்பு உள்ளவன். தலையில் அடர்த்தியான கருமயிரும், ஆலோசனைக்கும் கவலைக்கும் உட்படாத நெற்றிப் பிரதேசமும், பெரிய அழகிய வாயும், கபடமற்ற பழுப்பு நிறமுள்ள கண்களும், இந்த முக அமைப்பில் சீர்கேடடைந்தவனுடைய சாந்தமான புன்சிரிப்பும் காணப்படும். தெற்கு நாடுகளில் ஏராளமாக அடிக்கடி நாம் காணக்கூடிய அழகுள்ள மனிதர்களில் இவன் ஒருவன். அவன் நல்ல பாடகன். குத்துச் சண்டையிடக்கூடியவன். நகரத்தில் டம்பமாக வாழக்கூடியவன்.

அவன் இப்பொழுது ரோமாபுரியில் இதாலிய தூதராக நியமிக்கப்பட்டிருக்கிருன். இது வரையில் ஆறு வருஷங்களாக இதாலியின் அயல்நாட்டு மந்திரியாகயிருந்தான். ஐரோப்பா வில் ஒரு முக்கிய மனிதன். உலகத்தில் உண்டாகியிருக்கும் கொடுமைகளை ஆதரித்து வந்தவன்.

சியானோ பிரபுவின் வாழ்க்கை அவருடைய முகம் போல சாவதானமாகக் கழிந்து வந்தது. சென்ற யுத்தத்தில் பெயரும், கீர்த்தியும் ஐச்வர்ய லாபமும் பெற்ற ஒருவருக்கு ஜனித்து, ஆரம்பம் முதல் தனக்கு லாயக்கான பல துறைகளிருப்பதையும் கண்டார். மேலும் முஸோலினி ஏற்படுத்திய கருஞ்சட்டை இயக்கத்தை முதல் முதலில் ஆரம்பித்தவர்களில் சியா னோவின் தகப்பனரும் ஒருவர். பள்ளிக்கூடத்தில் படிக்கும் பொழுதே தகப்பனரின் சலுகை யின் பலத்தினல் புரட்சி கூட்டத்தில் சேர்ந்து கொள்ளுவான். இதிலிருந்து அவனுக்கு ஒரு இடைஞ்சலும் அல்லது அபாயமும் நேரிடவில்லை. இதன் மூலம் பாஸிஸத்தில் கலந்து கொள்ள அவனுக்கு சந்தர்ப்பம் வாய்த்தது.

இச்சிறிய வாலிபன் ராஜ தந்திரி. உத்தியோகத்தில் அமர்ந்தபொழுது இவனுக்குச் சீக்கிரம் உயர்வு ஏற்படுமென்று எதிர்பார்க்கப்பட்டது. தூதர் கோஷ்டியிலிருந்துகொண்டு ஒரு பெரிய நிகழ்ச்சியை உண்டுபண்ணி விடுவானென்பது தான் எதிர்பார்க்கமுடியவில்லை. பூனஸ் ஐயர்ஸிலிருந்து உத்தியோகத்தைவிட்டுத் திரும்பியதும், ரோமில் இதாலிய தூதராயிருந்த பொழுது அவன் எட்டா முஸோலினியை விவாகம் செய்துகொண்டான். இருதரப்பாருக்கும் இந்த சம்பந்தம் உபயோகமுள்ளது. முஸோலினி வம்சத்தார்கள் பிரபுக்கள் கோஷ்டியில் சேர்ந்துகொண்டார்கள். சமீப காலத்தில் உயர்வடைந்த சியானோவுக்கு ராஜீய அதி காரத்தில் ஒரு பங்கு கிடைத்தது. 30 வயதுக்குட்பட்ட சியானோ மேலான பதவியை வகிக்க லாயக்குள்ளவனுக ஆகிவிட்டான். ஷாங்கையில் தூதுகோஷ்டியின் தலைவராக யிருந்துவிட்டு, அவன் தன்னுடைய மாமனரின் பொதுஜன இலாகா ஆபீஸின் அதிகாரியாக நியமிக்கப்பட்டான். பிறகு இந்த இலாகா விரிவான மந்திரி சபையாக மாறிற்று. பொது ஜன கல்வி அபிவிருத்தி இலாகாவாக விளங்கிற்று. பிறகு அபிஸீனியா யுத்தம் நடை பெற்றது. இதில் ஈடுபட்டு சியானோ உலகத்தில் ஒரு முக்கிய மனிதனுக விளங்கினன்.

"லா-டிஸ்பராடா" என்னும் பெயர் பூண்ட வெடி விமானப் படையின் தலைவராக சியானோ சென்றுன். தற்காப்பில்லாத அபீஸினியா கிராம வாசிகளின் பேரில் வெடிகுண்டு களை வீசினன். தன்னுடைய கீர்த்திகளைப் போற்றி தானே கவி பாடினன். "ஒரு அழகான அனுபவம்" என்றும் நம் விமானங்களைக் கண்டு ஜனங்கள் சிதறி ஓடுவதைப் பார்த்தால், புஷ்பங்கள் விகசிப்பதுபோலிருந்ததென்றும் அவன் எழுதினன்.

சியானோவின் பேச்சை அடிக்கடி சொல்லிச் சிந்தனை செய்வதுண்டு. சியானோவின் குணதிசயங்களை இது நன்ருய் வெளிப்படுத்துகிறது. உலகம் தீப்பற்றி எரியும்பொழுது நாஸிகளும், பாஸிஸ்டுகளும் சந்தோஷப்படும் மனப்பான்மையை ஒத்தது. துணிகரமுற்ற வாலிபமுள்ள அற்பர்கள், அலக்ஷிய புத்தியும் வீண் பெருமையும் கொண்டவர்கள். மற்றவர் கள் அவஸ்தைப்படுவதைக் கணடு சுலபமாக ஆனந்தப்படுகிறவர்கள்.

வெற்றி பெற்றதில் அதிக சந்தோசமடைந்து அபிஸீனியாவிலிருந்து சியானோ திரும்பி வந்தபொழுது அவன் இதாலியின் அயல் நாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டான். இப் பொழுது அவனுக்கு வயது 33.

இதுமுதல் ஆறு வருஷங்கள் வரையில் ஐரோப்பிய ராஜீய விஷயங்களில் அவன் தலை யிட்டு வந்தான். அச்சு நாடுகளின் கூட்டுறவை அமைக்கும் வேலைக்காக அவன் முதல் முதலில் பெர்லினுக்குச் சென்றுன். அதற்குப்பின் அவன் ஒவ்வொரு தேசத்திற்கும் சென்றுன். முஸோலினி வம்சத்தின் இளவரசரென்றும் பாஸிஸ்டு இதாலியில் முஸோலி னிக்கு அடுத்த உத்தியோகஸ்தரென்றும் சியானோவை எல்லோரும் மதித்து வந்தார்கள். ஆகிலும் ராஜீய விஷயங்களில் அவன் அதிக முன்னேற்றமடையவில்லை.

இந்தக் காலத்தில் அவனிடம் காணக்கூடிய குணதிசயங்களெல்லாம் உத்தியோக சம் பந்தப்பட்டதல்ல. இன்பம் அனுபவிப்பதிலும் பணம் சம்பாதிப்பதிலும் அவனுக்குப் பேராசையிருந்தது. ரோமில் பொது ஜனங்களெல்லாம் சியானோ ஸ்திரீ சம்போக விஷயத் தில் செய்த காரியங்களைப்பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். அவன் ஒளிமறைவாக ஒன்றும் செய்வதில்லை. அபிஸீனிய நிகழ்ச்சிகளைத் தற்புகழ்ச்சியுடன் பகிரங்கப்படுத்தியது போல் தன்னுடைய இன்ப வாழ்க்கைச் செய்கைகளையும் வெளிப்படையாகவே நடத்தி வந்தான்.

இதே சமயத்தில் பால்ஸாக் எழுதியுள்ள கட்டுக்கதையின் கதாநாயகன்போல் தன் னுடைய ஐச்வர்யத்தை விருத்திசெய்வதற்கும் ஊக்கமுள்ளவனுகயிருந்தான். தன்னுடைய ஆபீஸ் மூலமாகக் கிடைக்கும் தகவல்களை ஆதாரமாகக்கொண்டு ஸ்டாக் எக்ஸ்செஞ்ஜ் மார்க்

கெட்டில் ஏராளமான பணத்தைச் சூதாடினன். டஸ்கெனியில் பெரிய கிராமங்களையும், வர்த்தக சங்கங்களையும், இருப்புப்பாதை கம்பெனிகளையும் விலைக்கு வாங்கினன். இயற்கையாக வே தனவந்தராகயிருந்ததால் இதாலியில் பெரும் பணக்காரனுக அவன் ஆகிவிட்டான்.

அவன் கதி என்ன. உன்னத பதவியிலிருந்து கீழே இறங்கிவிட்டான். அத்துடன் சரணுகதியும் அடைந்துவிட்டான். ரோமில் தூதராகயிருப்பதிலிருந்து, ஜெர்மன் ரகசியப் போலீஸின் சூழ்ச்சியிலிருந்து அவன் தப்பிக்கக்கூடும். இங்கிருந்து முஸோலினிக்கு அவன் உபகாரம் செய்து வரலாம். வரும் காலத்தைப்பற்றி அவனுக்குக் கவலையே கிடையாது. அவனுடைய ஐச்வர்யம் வெகு தேசங்களில் பரவியிருக்கிறது. பிரெஸீலிலுள்ள அவனுடைய பணங்களை அரசாங்கத்தார் கைவசப்படுத்திவிட்டார்கள். ஆகிலும் ஆர்ஜென்டைனவிலும், ஸ்விட்ஸர்லாந்திலும் அவனுக்குப் போதுமான பொக்கிஷங்களிருக்கின்றன. தேசப்பிரஷ்டம் அடைந்தாலும் அவன் சுகமாகக் காலம் கழித்துவிட வசதியிருக்கிறது.

---

# ஜப்பானின் யுத்த முறைகள்.

## உறுதியுடன் சண்டை செய்கிறவர்களுடைய யுத்த தந்திரங்கள்.

(ஹான்ஸன் W. பால்ட்வின்—டைம்ஸ் பத்திரிகை, பிப்ரவரி 24, 1943).

நான்கு மாதங்களுக்குள்ளாக ஜப்பானியர்கள் ஒரு சாம்ராஜ்யத்தை ஜயித்துவிட்டார்கள். அவர்கள் 69 நாட்களுக்குள்ளாக மலேயா தீபகற்பத்தில் 400 மைல்கள் தூரம், நீந்தியும், கடந்தும், நடந்தும், துவிச்சக்கர வண்டிகளில் சென்றும் முன்னேறினர்கள். மூன்று மாதங்களுக்குள்ளாக உலகத்திலேயே செழிப்பான தீவுகளான டச்சுக் கிழக்குத் தீவுகள் ஜப்பானியர் வசமாயின. யுத்தக்கப்பல் பிரின்ஸ் ஆப் வேல்ஸூம், யத்த சஞ்சாரியான ரிபல்ஸ்ஸூம் விமானம் தாங்கிய ஹெர்மிஸ்ஸூம் முதல் மூன்று மாதங்களில் ஜப்பானியரால் மூழ்கடிக்கப்பட்டன. இரண்டு வருஷ யுத்தத்தில்கூட இம்மாதிரியான நிகழ்ச்சிகளை ஜெர்மானியர்கள் செய்யமுடியவில்லை. பர்மாவுக்குள் ஒரு நாளைக்கு சராசரி ஐந்துமைல்களுக்கு மேலாக முன்னேறி மாண்டலே நகரத்துக்கு ஜப்பானியர்கள் சென்ருர்கள். அமெரிக்க தளபதியான லெப்டினண்ட் ஜெனரல் ஜோஸப் W. ஸ்டில்வெல் சொல்லுவதுபோல நமக்கு பலமான தோல்விகள் ஏற்பட்டன.

இவையெல்லாம் நாம் எதிர்பாராதவை. ஐரோப்பாவில் வெற்றிபெற்ற ஜெர்மன் பான்ஸர் துருப்புகளைப்போல ஜப்பானின் நடவடிக்கைகளும் ஆச்சரியமானவை. நேச தேசத்தாரின் சிறந்த ராணுவ நிபுணர்களும் ராஜீய வாதிகளும் ஜப்பானின் செய்கைகளைக் கண்டு மயங்கி விட்டார்கள். ஜப்பானுக்கு ஏற்பட்ட வெற்றிகளின் மூலம் நமக்கு புதிய ஞானம் உண்டாகிற்று.

ஜப்பானியர்கள் மன உறுதியில்மட்டும் சிறந்தவர்களல்ல. மானியம் அனுபவித்த நாளிலிருந்த அதிக நாகரீகம் பெருத ஜனங்களின் மனேநிலைக்கு இதை ஒப்பிடலாம். அவர்கள் சரீர திடமும் பொருந்தியவர்கள். சில சாத உருண்டைகளுடனும், ஒரு சிறிய பணியாரத்துடனும் ஒரு ஜப்பானியச் சிப்பாய் ஆறு நாட்கள் ஜீவனம் செய்து விடுவான். யுத்த களத்தில் துருப்பு வசதியும் உஷ்ணமான உணவும் அவனுக்குக் கிடையாது. சர்க்கரை கிடைப்பது அபூர்வம். அவன் நாட்டுப்புறங்களில் வசிப்பான். அவனுக்குச் சாமான் கடைகள் தேவையில்லை. பொழுதுபோக்கு வசதிகளும், தேகாப்பியாச விளையாட்டுகளும் அவசியமில்லை. குட்டையிலோ அல்லது ஓடையிலோ இருக்கும் ஜலத்தை தன்வசமுள்ள வடிகட்டியால் சுத்தம் செய்து அந்த நீரை அருந்தி தாக சாந்திசெய்து கொள்ளுவான். அவன் அநேக முறைகளில் மிருகப்பிராயமுள்ளவன். ஆகிலும் அவனுடைய நடவடிக்கைகளைப் புத்தி கூர்மையுள்ள தலைவர்கள் அடக்கியாண்டு வருகிருர்கள்.

### பிரிடிஷாருக்கு பிரதிகூலம்.

ஜப்பானியப்படைகள் கவசம் பூண்ட யந்திர பலங்கள் உள்ளவையல்ல. போக்கு வரவுக்கு அவர்கள் தங்கள் கால்களையும், துவிச்சக்கர வண்டிகளையும், குதிரைகளையும், கப்பல்களையும், தோணிகளையும் உபயோகப்படுத்துகிருர்கள். மோட்டார் போக்குவரத்தும் உபயோகப்படுகிறது. வசதியுள்ள இடங்களில் இருப்புப்பாதைகளும் உபயோகப்படுகின்றன. ஆகிலும் இவைகளை மட்டும் ஜப்பானியர்கள் நம்பியிருக்கவில்லை. பர்மாவில் பிரிடிஷ் துருப்புகளுக்கு தளகர்த்தராகயிருந்த ஜெனரல் அலெக்ஸாண்டர் பிரிடிஷாரின் தோல்விக்கு, லாயக்கில்லாத பிரதேசத்தில் மோட்டார்களைப் போக்குவரத்துக்கு உபயோகித்ததுதான் காரணம் என்று அபிப்பிராயப்பட்டார்.

ஜப்பானியர்களிடம் லேசான முஸ்தீப்புகளிருந்தன. அவைகளை அவர்கள் குதிரைகள் பேரிலும், கூலிகள் மூலமாகவும் கொண்டுபோனார்கள். காடுகளில் சண்டைசெய்யும் துருப்புகளும் தயாராகயிருந்தன. மோட்டார்களையும் அவைகள் செல்லக்கூடிய ரஸ்தாக்களையும் நாம் நம்பியது, நமக்குப்பெரிய அசௌகரியமென்றும் அவர் சொன்னார்.

இந்த உலகத்திலேயே ஜப்பானைப்போல வெடிகுண்டுகளின் மத்தியில் துருப்புகளை இறக்குவதில் பயிற்சிபெற்றதோ அல்லது சாதுர்யம் வாய்ந்ததோ உள்ள மற்றொரு தேசம் கிடையாதென்று சொல்லலாம். தென்மேற்கு பஸிபிக்கிலுள்ள உஷ்ணமான கடற்கரைப் பிரதேசங்களில் ஜப்பான் இறங்கிவிட்டால், ஜப்பானுக்கு அனுகூலம் அதிகம். காடுகளில் யுத்தம் செய்வதில் அவனுக்குச் சமானமானவன் ஒருவரும் கிடையாதென்று ஜப்பான் காட்டிவிட்டது. பர்மாவில் பயிற்சிபெற்ற படானில் யுத்தம் செய்த பிலிபைன்ஸ் கெண்ட் படைகளும், 31-வது காலாட்படையும் ஜப்பானியர்களைப்போலவே காடுகளில் யுத்தம் செய்வதில் பயிற்சிபெற்று பழக்கப்பட்டவர்களென்றாலும், ஜப்பானிய சேனையைப்போல ஒன்று பட்டு யுத்தம் செய்வதில் சிறந்தவர்களல்ல.

யுத்த தந்திரங்களை ஜப்பானியர்கள் ஜெர்மானியர்களிடமிருந்து கற்றுக்கொண்டார்கள். ஜப்பானியர்கள் முன்னேறித்தாக்கும் முறைகளை அனுஷ்டிக்கிறவர்கள். எதிரியின் விலாப்பக்கத்தைத்தாக்கி எதிரியை சுற்றி வளைத்துக்கொள்ளுவதுதான் அவர்களின் யுத்த தந்திரம். இதைத்தவிர போர்முனையில் கபடமாக எதிரியின் பின்புறம் செல்லும் முறையும் அனுஷ்டிக்கப்படுகிறது. இவை இரண்டும் சேர்ந்து எதிரியின் முன்னணிக்குப் பின்னால் வலுவான ஒரு ஜப்பானிய பலத்தை உண்டுபண்ணி விடுவதோடு, ஸப்ளை மார்க்கங்களும் இதன் மூலம் துண்டிக்கப்படுகின்றன. மலேயாவில் இம் முறைகள்தான் அடிக்கடி கையாளப்பட்டன. பிரிடிஷார்கள் கிழக்குப் பிராந்தியத்தில் மோட்டாரின் யுத்த முறைகளை உபயோகித்தது தவறு.

சிங்கப்பூரில் பீரங்கிகள் குண்டுகளை வர்ஷித்தன. படையெடுப்புக்குள்ளாகும் நாட்டு மக்களின் உடையை அணிந்துகொண்டு ஆயிரக்கணக்கான ஜப்பானியர்கள் கபடமாக அயல் நாட்டுக்குள் புகுந்துவிடுவதும், இவர்களுக்கு உதவியாக ஐந்தாம் படையினரும் அதிருப்தி உள்ளவர்களும் வேலை செய்வதும், எதிரி பின்வாங்குவதற்குப்போதுமான காரணங்கள். இது நடைபெறுவிட்டால் ஜப்பானியர்கள் இருவிலாப் பக்கங்களிலும், நேர்முகமாகவும் பின்புறமிருந்தும் தாக்க ஆரம்பிக்கிறார்கள். யுத்த களத்திலுள்ள பீரங்கிகளும் அவர்களுக்கு உதவியளிக்கும். சிங்கப்பூர் தீவைத் தாக்கியதில் பீரங்கிகள் முக்கியமான வேலை செய்தன. கீழ்த் திசையில் சிங்கப்பூரை பீரங்கிகள் தகர்த்தது போல் ஒரு இடத்திலும் நடைபெறவில்லை. எதிரியைத் தாக்குவதுதான் முக்கிய நோக்கமாகும்.

இந்தத் தந்திரங்களை முறியடிப்பதற்குச் சுலபமான முறைகள் இருக்கின்றன. எதிரியை விட அதிகமான தந்திர முறைகளை நாம் கையாளவேண்டும். அமெரிக்காவின் வனாந்தர வாசிகளின் நடையுடைபாவனைகளை நாம் கற்றுக்கொள்ளவேண்டும். இந்தியாவின் யுத்தங்களை நாம் ஆராய்ச்சி செய்யவேண்டும். இத்துடன் நின்றுவிடக்கூடாது. ஜப்பானியர்கள் தரையிலும் சமுத்திரத்திலும் சண்டை செய்வதில் திடமானவர்கள். அவனிடம் சில குறைபாடுகளுமிருக்கின்றன. அவனுடைய படைப் பகுதியும், டிவிஷனும் நம்மைவிடக் குறைவான ஆயுதங்களைப் பெற்றிருக்கின்றது. ஜப்பானியர்களிடம் யந்திர சாதனங்கள் அதிகமில்லை. டாங்கிகள் அதிகமாகயில்லை. டாங்குப் படைகள் மட்டும் தயாராகியிருக்கின்றன. சமவெளிகளில் நவீன யுத்தத்தில் உபயோகப்படுத்தப்படும் யந்திர சாதனங்கள் நமக்குப் பயன் அளிக்கும். ஜப்பானியர்களுக்குப் பாதகமளிக்கும். நாம் அவர்களைவிட அதிக மேன்மை அடைந்து டோக்கியோவைத் தாக்கியதுபோன்ற காரியங்களைச் செய்துவந்தால் அவர்களுக்குத் திகில் உண்டாகி அவர்கள் தவறான காரியங்களைச் செய்ய ஆரம்பித்துவிடுவார்கள்.

## கனமான உடுப்புகள்.

இதை மட்டும் நாம் நம்பியிருக்க முடியாது. உடுப்பணிந்த மஞ்சூரியாவிலுள்ள ஜப்பானிய குவாண்டங் சேனையானது ருஷ்யாவின் குளிரை அனுபவித்துப் பழக்கமடைந்து இருக்கிறது. சமவெளிகளில் யுத்தம் செய்வதற்கும் பயிற்சி பெற்றிருக்கிறது. ஜப்பானியர்கள் பனிக்கட்டி மேல சண்டைபோடும் துருப்புகளையும் மலைகளில் சண்டைபோடும் துருப்புகளையும் தயார் செய்திருக்கிறார்கள். ருஷ்ய ஜப்பான் எல்லைச் சரங்கத்தில் நடைபெற்ற மூவாயிரக்கணக்கான சில்லரைச் சண்டைகளில் ஒன்றான செக்குபங்கு குன்று போரில் ஜப்பானியர்களுக்கு ருஷ்யத் துருப்புகள் ஏராளமான மனித நஷ்டத்தையும் முஸ்தீப்பு நஷ்டத்தையும் விளைவித்தன. ஆகிலும் அவர்களுடைய முரட்டுத்தனத்தையும் ஊக்கத்தையும், ஜப்

பானியர்கள் வெளிக்காட்டினுர்கள். ஆர்தர் துறைமுகம் விழுந்ததை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். இரத்த வெள்ளத்துடன் அந்தத் துறைமுகத்தை ஜப்பானியர்கள் கைப் பற்றினுர்கள். சிறிய ஜப்பானியப் படைகள் அழிந்தபோதிலும் புதிய படைகள் வந்து கொண்டேயிருந்தன. மிட்வே தீவுகளில் எதிருக்கு நல்ல தண்டனை கிடைத்தது. ஆகிலும் இது அவர்களுடைய எண்ணங்களை மாற்றவில்லை. ஜப்பானியர்கள் அலூஷியன் தீவுகளில் இறங்கி அங்கே ஊன்றியிருக்கிருர்கள். நாம் அவர்களை அழிக்கும் வரையிலும் அதைவிட்டு அவர்கள் போகமாட்டார்கள்.

ஜெர்மனி விழுந்தவுடன் ஜப்பானும் விழுந்துவிடுமென்ற பழைய பல்லவியை நாம் தள்ளி விடவேண்டும். ஜப்பானியர்கள் பின்வாங்கிவிடமாட்டார்கள். ஏற்கனவே ஒரு சாம் ராஜ்யத்தை அவர்கள் பிடித்துவிட்டார்கள். புதியதேசங்கள் பிடிக்கவும் திட்டம் போடு கிருர்கள். ஜப்பானைத் தடுக்காமல் விட்டுவிட்டால் ஜெர்மனிக்காக யுத்தத்தை அதுவே ஜயித்துவிடும். ஜெர்மனி முறியடிக்கப்பட்டாலும் ஜப்பான் பிடித்திருக்கும் நாடுகளில் இருந்து அதைத் துறத்தியடிக்க வெகுகாலம் பிடிக்கும்.

---

# யூதர்களின் படுகொலை.

(ஸர் வில்லியம் பெவெரிட்ஜ்).

சென்ற வருஷம் பிப்ரவரி மாதத்தில் "யூதர்களை நிர்மூலமாக்கவேண்டுமென்று" ஹிட்லர் பிரசுரம் செய்தான். சென்ற சிலமாதங்களில் ஜெர்மனிக்கு வெளியே உள்ள நாடுகளில் ஹிட்லரின் பேச்சு வீண்பேச்சல்ல என்றும், ஹிட்லரின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் யூதர்கள் ஜாதியைச்சேர்ந்தவர்களென்ற ஒரு காரணத்தை முன்னிட்டு யூதர்கள் பூராவும் அழிக்கப்படுகிருர்களென்றும், சென்ற வருஷம் பிற்பாதியில் யூதர்களை அழிக்கும் திட்ட மானது ஜெர்மனியால் பரிஷ்காரமாக நடத்தப்பட்டதென்றும் புலப்பட்டது.

டிஸம்பர் மாதம் 17-ம் தேதியன்று காமன்ஸ் சபையில் அயல்நாட்டு காரியதரிசி இது விஷயமாக உத்தியோகமுறையில் பூராத் தகவல்களும்கொண்ட ஒரு அறிக்கை வெளியிட்டு ஐக்கிய நாடுகளின் சார்பாக சபையின் ஆக்ஷேபனையைத் தெரிவித்தபொழுது, இதுவரையில் ஏற்படாத கொடுமைகளைச் சகிக்காமல் மௌனமாக சிறிது நேரம் சபையார்கள் நின்ருர்கள். இந்தச் செய்கைகள் காட்டுமிராண்டித்தனம் என்றும், நேசதேசத்தார்கள் அவைகளைக் கண்டனம் செய்கிருர்களென்றும் மிஸ்ட்டர் ஈடன் வெளியிட்டதோடு, இந்தக் குற்றங்களுக்கு ஜவாப்தாரியானவர்களைப் பழிவாங்குவதென்று பிரிடன் தீர்மானித்துவிட்டதென்றும் அதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளும் நடத்தப்படுமென்றும் வெளியிட்டார்.

பதில் தண்டனை விதிப்பது என்று வெளியிட்டது மெத்த அவசியமான காரியம் இதற்கு வெற்றி அவசியம். பதில் தண்டனை விதிப்போம் என்ற பயமுறுத்தல் மூலம் ஜெர் மனியின் ஆக்ஷிக்குட்பட்ட நாடுகளிலுள்ள ஜனங்களின் உயிரையும் அவஸ்தையையும் காப் பாற்றப்போவதில்லை. பதில் தண்டனை விதிப்போம் என்ற பேச்சைக்கேட்டு ஒருவரும் திருப்தியடையமாட்டார்கள். ஏழு வாரங்களுக்கு முன்னுல் பூரா விஷயங்களும் வெளி வந்துவிட்டதாலும், அதிகாரவர்க்கத்தாருக்கு இந்த விஷயங்கள் ஏற்கனவே அறிமுகமாக யிருந்திருப்பதாலும், பிரிடனிலும் மற்றயிடங்களிலும் உள்ள ஜனங்களிடையே ஒரு பிரச்னை கிளம்பியிருக்கிறது. ஜெர்மன் வெற்றியினுல் கொலைக்குள்ளாக்கப்பட்டும், சித்ரவதை அனுப வித்துவரும் ஜனங்களை எவ்விதம் ரக்ஷிப்பது என்ற யோசனை கிளம்பியிருக்கிறது.

### தாராளக் கொள்கை.

இவர்களோடு அவஸ்தைப்படும் எல்லா ஜாதியாரையும் நாம் சேர்த்துக்கொள்ளவேண் டும். யூதர்கள் விசேஷமான கொடுமைகளுக்குள்ளாகுகிருர்கள். ஆகிலும் தனிப்பட்ட முறையில் தங்களுக்கு சலுகை காட்டவேண்டுமென்று அவர்கள் விரும்பவில்லை. ராஜீயக் கொள்கைகளுக்காக உயிர்துறந்தவனும் ஜாதிபேதத்தினுல் உயிர்துறந்தவனும், நம்முடைய அனுதாபத்திற்கு லாயக்குள்ளவன்.

இந்தப் பிரச்னைக்கு விடை சுலபமானதல்ல. சந்தோஷகரமானதுமல்ல. ஜெர்மனியின் அக்கிரமச் செய்கைகளை ஆக்ஷேபிக்கும் ஒவ்வொரு தேசமும், நாட்டைவிட்டு ஓடி வருகிறவர்

களை வரவேற்க தங்களுடைய சட்டதிட்டங்களைத் திருத்தியமைக்கவேண்டும். இவ்விதம் செய்தால் தப்பி ஓடிவரும் யூதர் மறுபடியும் ஜெர்மானியர் கையில் அகப்படாமல் செய்ய ஹேதுவாகும். ஆகையால் தப்பி ஓடி அயல்நாட்டுக்கு பத்திரமாகச் சென்று விடலாம் என்ற உறுதி ஏற்பட்டால் தப்பியோடக்கூடிய எல்லோரும் நடுநிலைவகிக்கும் ஸ்பெயினுக்கோ அல்லது ஸ்விட்ஸர்லாந்துக்கோ போகலாம். இந்த தேசங்களுக்கு தாராளமாகச் செல்லு வதற்கு, தங்களூரிலுள்ள சட்டதிட்டங்களைத் திருத்தியமைப்பதைவிட நேசநாடுகள் உருவான சில நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளவேண்டும். ஓடிவருகிறவர்களுக்கு ஆகார வசதியும் போக்குவரவு வசதிகளும் உடன் காலத்திலேயே அமைக்கவேண்டும். இவைகளைத்தவிர வருங்காலத்திய திட்டத்தைப்பற்றித் தெளிவான வெளியீடும் அவசியமாகும். யூதர்களைக் காப்பாற்றுவதற்கு அவசியமான நடவடிக்கை யாதெனில், வெற்றிகிடைத்தபின் ஐரோப்பா விலும் உலகம் பூராவிலுமுள்ள யூதர்களுக்கு சாச்வதமான, தேவையான ஒரு வாசஸ்தலத்தை நிர்மாணம் செய்யும் பொறுப்பு தங்களுடையதென்று நேசதேசத்தார்கள் வெளியிடவேண்டும்.

## உதவியளிப்பவர்களுக்கு உதவி.

இம்மாதிரி வெளியிடுவது ஞாயமானது. ஒரு வகையில் பார்த்தால் இந்த யுத்தம் யூதர் களின் பிரச்னையைப்பற்றித்தான் நடைபெறுகிறது. ஆரிய மக்களை அடக்கியாளுவதற்காக யூதர்கள்தான் இந்த யுத்தத்தை ஆரம்பித்தார்களென்று ஹிட்லர் சொல்லுகிறான். ஹிட்லர் யூதர்களை வதைப்பதென்பது, ஜெர்மனிக்கு வெளியேயுள்ள நாடுகளில் நாஸிக் கொள்கை களின்படி மனித ஸ்வதந்திரத்தை அழித்துவிடுவது என்ற முறைகளின் இழிவான நடத்தை யாகும். இந்தக் கொள்கைகளை அழித்துவிடுவதும், சமாதானமுறையில் ஜீவித்துவரும் ஒவ்வொரு ஜாதியாரும் பத்திரமாக வசிக்கவேண்டுமென்ற உரிமையை ஸ்தாபிதம் செய்வதும் தான் இந்த யுத்தத்தில் நேசநாடுகள் கலந்துகொண்டதின் நோக்கங்களாகும். யுத்தத்தில் வெற்றிபெற்று, யூதர்கள் பிரச்னையைத் தீர்க்காமல் சும்மாவிருந்துவிட்டால், யுத்த நோக்கங் களில் ஒன்றை நாம் அடையாததாகும். ஜெர்மனியைச் சிக்ஷித்துவிடுவோமென்று பயமுறுத்து வதில் பிரயோஜனமில்லை. யூதர்களைக்காப்பாற்றுவதற்கு நாஸித்தலைவர்களல்லாத மற்ற ஜனங்களின் மனோபாவத்தைத் திருத்தியமைக்கவேண்டும். யூதர்கள் நாஸிகள் நேர்முகமான ஆக்ஷிக்குட்பட்ட நாடுகளிலும் ஜெர்மன் ஆதிக்கத்துக்குட்பட்ட ஹங்கேரி, ருமேனியா, விஷி பிரான்ஸ் முதலிய தேசங்களிலுமிருக்கிறார்கள். இந்த நாடுகளுக்கெல்லாம் பதில் தண்டனை முறையைக் கையாளுவோமென்ற தகவல்களை அனுப்பவேண்டும். இரண்டாவதாக, ஜெர்மனியிலுள்ள யூதர்களுக்கு முதலுதவியளிக்கக்கூடியவர்கள் நடுநிலைமை வகிக்கும் ஸ்பெயினும் ஸ்விட்ஸர்லாந்தும்தான். இந்த நாடுகளுக்கு அநேக யூதர்கள் தப்பி ஓடிவருகிறார் கள். ஜெர்மன் அரசாங்கத்துக்கு நாம் விடுக்க உத்தேசித்திருக்கும் யோசனை பிரயோஜன மற்றுவிட்டால், அநேக யூதர்களும் அந்த நாடுகளுக்குத் தப்பி ஓடலாம். ஆகிலும் இவ்விரண்டு நாடுகள்மட்டும் மனித வர்க்கத்தினிடமுள்ள பொறுப்பைப் பொருக்கவேண்டுமென்று எதிர்ப் பார்க்க முடியாது. தப்பி ஓடுகிறவர்களுக்கு ஆகார வசதியளிக்க நாம் உதவவேண்டும். இரண்டாவதாக, நாம் செய்யும் ஒத்தாசை முதலுதவிதானென்றும், அவர்களுக்கு சாஸ்வத மான வாஸஸ்தலத்தை வேறொரு பிரதேசத்தில் நேசநாடுகள் ஏற்பாடு செய்யுமென்றும் நேசதேசத்தார்கள் வாக்குறுதி செய்யவேண்டும்.

## ஹிட்லருக்கு ஆக்ஷேபக் கடிதம்.

இவைகளைச் செய்தபோதிலும், ஜெர்மனின் அக்கிரமத்திற்குட்பட்டவர்களில் தப்பி ஓடுபவர்கள் கொஞ்ச பாகமாகத்தானிருக்கும். லக்ஷக்கணக்கான யூதர்களைக் காப்பாற்ற வேண்டுமானால், நடுநிலைமை வகிக்கும் தேசங்கள் மூலமாக நேசநாடுகள் ஜெர்மனிக்கு ஒரு அறிக்கை அனுப்பவேண்டும். யூதர்களை அழிப்பதற்கு பதிலாக, ஜெர்மனியிலிருந்தும் ஜெர்மன் ஆதிக்கத்துக்குட்பட்ட இதர நாடுகளிலிருந்தும் யூதர்கள் வெளியேறுவதற்கு அனுமதிகொடுங்கள் என்று ஜெர்மனிக்கு புத்தி புகட்டவேண்டும். இந்த வேண்டுகோளை ஜெர்மனி புரக்கணித்துவிடலாம். இதனால் ஒரு பாதகமும் ஏற்பட்டுவிடாது. நாம் செய்ய வேண்டிய முயற்சிகளைச் செய்ததாகும். இந்தக் கோரிக்கை விடுத்தவர்களின் மனச்சாக்ஷி திருப்தியடையும். ஜெர்மனியின் நடத்தை இழிவாகத்தோன்றும். நமது வேண்டுகோளுக்கு ஒருக்கால் சாதகமான பதில் கிடைக்கிறதென்று வைத்துக்கொள்ளுவோம். நேசநாடுகளின் உனவுப்பொருள் வசதிகளையும் போக்குவரவு சாதனங்களையும் குறைக்க ஏராளமான யூதர்களை அனுப்பிவிடலாமென்று ஹிட்லர் நினைத்துவிடலாம். போலந்திலும் ஜெர்மனியிலு முள்ள கொலைக்களத்துக்கு யூதர்களை அனுப்புகிறதற்குப்பதிலாக அவர்களை தொடர் வண்டி களில் ஏற்றி, நடுநிலைமை வகிக்கும் தேசங்களின் எல்லைச்சரகத்திற்குக் கொண்டுபோய் நேசதேசத்தாரின் பொறுப்பில் விட்டுவிடலாம். ஆக்கிரமித்த நாடுகளில், ஜெர்மன் படைகள் தங்களுடைய எதிராளிகளை எதிர்க்க பொதுஜனங்களை உபயோகித்ததுபோல், இப்பொழுதிருக்

கும் யுத்த நிலைமையில், தோல்வியைத் தவிர்ப்பதற்கு ஜெர்மனி யூதர்களை வெளியே அனுப்பி விடலாம்.

ஆகையால் இவ்விதமான ஒரு வேண்டுகோள் செய்யாததற்கு முகாந்திரமிருக்கிறதா என்று பார்ப்போம். யுத்த நிலைமையையும், ஆகாரம், போக்குவரத்து, ஸப்ளை வசதிகளையும் பூராவாகவும் பரிசீலனை செய்யக்கூடியவர்கள்தான் பொறுப்புடன் இதற்கு பதிலளிக்க முடியும். இவ்விதமான கோரிக்கை அனுப்பினால்தான் அநியாயமாய் உயிர்துறக்கக்கூடிய அநேக யூதர்களை நேசநாடுகள் காப்பாற்றலாம்.

ஜெர்மன் வெறியிலிருந்து காப்பாற்றக்கூடியவர்கள் இப்பொழுது நடப்பதுபோல் சொல்பமாகயிருந்தாலும், அல்லது தப்பியோடும் வசதிகளை அதிகப்படுத்துவதினாலும் யூதர்களிடம் இருக்கும் வெறுப்பைவிட எதிரியைச் சங்கடத்தில் மாட்டிவிடவேண்டுமென்ற எண்ணங்கொண்டு ஹிட்லர் அநேகரை வெளியேற்றுவதினாலும், சங்கியை அதிகரித்ததாலும் சரி, அபாயத்துக்குட்பட்ட யூதர்களுக்கு உதவி அனுப்பும்பொறுப்பு நடுநிலைமை வகிக்கும் நாடுகளைப் பொருத்ததாகும். இந்த உதவியளிப்பதற்கு நடுநிலைமை வகிக்கும் நாடுகளுக்குள்ள சக்தியும், உத்சாகமும் நேசதேசத்தாரைப் பொருத்திருக்கிறது. யுத்தத்துக்குப்பின் உலக ஆதிக்கம் நேசதேசத்தாரிடம்தானிருக்கும். முதலுதவி தாத்காலிகமானதென்றும், ரக்ஷணை பெற்றவர்களுக்கெல்லாம் வருங்காலத்தில் வாசஸ்தலம் நிர்மாணிக்கப்படுமென்றும் அவர்கள் தான் வாக்குறுதி சொல்லக்கூடும்.

### வாசஸ்தல அமைப்பு.

எவ்விடத்தில் வாசஸ்தலம் அமைப்பது? யூதர்களின் பிரச்னையை எவ்விதம் தீர்த்து வைப்பது. இது மகத்தான பிரச்னையல்ல. ருஷ்யாவுக்கு வெளியே யுத்தத்துக்குப்பின் மூன்று அல்லது நான்கு மிலியன் யூதர்களுக்குமேல் இருக்கமாட்டார்கள். ஐரோப்பாவிலிருந்து நாஸிப் பிசாசு துரத்தியடிக்கப்பட்டபொழுது, யூதர்கள் அவர்கள் தாய்நாட்டிலேயே குடியேறும்படியாகச் செய்துவிடலாம். ஆகிலும் யூதர்களின் வருங்கால க்ஷேமத்தையும் உலக சமாதானத்தையும் மதித்து யூதர்கள் ஒரேயிடத்தில் வசித்துவர வேண்டுமென்று எண்ணினால், அவர்களுக்கு ஐரோப்பாவிலோ, ஆசியாவிலோ, ஆபிரிக்காவிலோ ஸ்தலவசதி கண்டுபிடிப்பதென்பது சமாதான காலத்திய மகத்தான பிரச்னையாகும். இதேமாதிரி அநேக சிரமமான பிரச்னைகளும் உண்டாகியிருக்கின்றன.

இப்பேர்ப்பட்ட காரியங்களை நேசநாடுகளுக்குள் ஒருவர்மட்டும் செய்துவிடமுடியாது. அகதிகளின் பிரச்னையானது ஐக்கிய நாடுகளின் மனித அன்பையும், தீர்க்கப்படவேண்டிய அநேக பிரச்னைகளிலும், யுத்த லக்ஷியங்களிலும் நேசதேசத்தார்கள் ஒன்றுபட்ட மனதுடன் இருக்கிறார்களா என்பதையும் சோதனை செய்யும் முறையாகும்.

---

## வெறுப்படைந்த ஸியாமிய ஜனங்கள்.

---

பாங்காக்கிலிருந்து ஸியாம் ஜனங்களுக்குச் செய்யும் ஒலிபரப்புகளில் ஸியாமுக்கும் ஜப்பானுக்குமுள்ள சம்பந்தங்களைப்பற்றிப் பேசுகிறதேயில்லை. ஸியாமில் நாகரீகம் பரவி அது பெரிய வல்லரசாக ஆகிவிடுமென்று அடிக்கடி சொல்லப்படுகிறது. வெகுகாலமாக கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஜனங்களுக்கு நல்ல உடை அணிந்துகொள்ளவேண்டும். நவீன முறையில் சல்லடங்கள், தொப்பிகள், சட்டைகள் போட்டுக்கொள்ளவேண்டும் என்றெல்லாம் புத்திமதி உரைக்கப்படுகிறது. பணம் கொடுத்து விலைக்கு வாங்கக்கூடியவர்களுக்கே துணிமணி கிடைப்பது இந்நாளில் துர்லபம். வேலைசெய்யும் பொழுதும், வியாபாரிகளிடம் ஊழியம் செய்யும் பொழுதும், ஸியாம் மக்கள் முகவாட்டத்தை விட்டு முகமகிழ்ச்சியுடனிருக்கவேண்டுமாம். மருந்துகளுக்குப் பணம் கொடுக்கமுடியாத பொழுது தெய்வ நம்பிக்கையையும் அவர்கள் இழந்துவிடவேண்டுமாம். மே ௴ 10-ம்தேதி நாகரீகத்தைப்பற்றி சொற்பொழிவு நடந்தபொழுது தேசீய நாகரீகச் சங்கத்தின் தலைவரான பிரதமமந்திரியின் உத்தரவுகளைக்கண்டு ஜனங்கள் முணுமுணுக்கிறார்களென்று சொற்பொழிவாளர் ஒப்புக்கொண்டார். பிரதமந்திரியின் உத்தரவுகளை ஒரு புஸ்தகமாக அச்சிடலாம் என்றும், அரசாங்கத்தின் புத்திமதிகளை அனுஷ்டிக்க ஜனங்கள் பிரியப்படவில்லையென்றும் அவர் சொன்னார். மேலும் அவர் சொன்னதாவது “ஆகிலும் நம்முடைய தலைவர் சிறியது

முதல், பெரிய காரியங்களிலும் சரியானமுறையில் தேசத்தை நடத்தி வருகிருர். இவருடைய தலைமையின் கீழ் ஸியாம் ஒரு பெரிய வல்லரசாக மாறிவிடுமென்பதில் சந்தேகமேயில்லை.

"இதற்குப் பிறகு சொற்பொழிவு மாறுபாடடைந்தது. மே ஸ்ரீ 11-ம் தேதி சொற்பொழிவாளர் எதிரிகளைக் குறித்து பொதுப்படையாக கடுமையாகப் பேசினர். முனிதர்களும், ஸ்திரீகளும் தேசாபிமானமுள்ளவர்கள். தேசத்தின் விரோதிகளை நன்ருய் அழித்துவிடுவார்கள். ஸியாம் மக்கள் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். சத்தியத்தையும் யோக்கியமான நடவடிக்கையையும் நம்புகிறவர்கள். நம்முடைய பௌத்த விக்ரகத்தையும், புனிதமான சின்னங்களையும் எவரேனும் கொள்ளையிட்டால், அவனைப் பழிவாங்கிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்போம். தேசத்தில் நல்லகாலம் வரும்வரையில் ஸியாம் மக்கள் கலகம் செய்து வருவார்கள்" என்றும் சொன்னர்.

மறுநாள் மற்றெரு பிரசங்கம் நடைபெற்றது. ஸியாம் ஜனங்கள் வலுவும், தீரமும் பொருந்திய யுத்த வீரர்கள் என்று வெளியிடப்பட்டது. தேசீய வீரர்களான அநேக மன்னர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டன. ப்ரா நாவரெசுயான் மன்னரின் ஞாபகார்த்த தினத்தை தற்காப்பு மந்திரிசபை ஏற்பாடு செய்துவருகிறதென்றும், நம்முடைய தற்காப்பு மந்திரிசபை போலவே, அந்த மன்னரும் ஸியாமின் ஸ்வதந்திரத்திற்காகப் போர்புரிந்தாரென்றும் சொல்லப்பட்டது. தற்காப்பு நாகரீகப் பேச்சுகள் போல் சொல்லப்படும் இந்தப் பேச்சுகள் ஆங்கர்வாட் சின்னங்களைக் கைப்பற்றிக்கொண்ட பெரிய ஆசியாவின் ஸ்வான்தார்களான ஜப்பானியர்களுக்கு எச்சரிக்கைவிடுப்பது போலாகும்.

---

# செம்படையிலுள்ள யுத்த வீரன்.

## நவீன ருஷ்யச் சிப்பாயின் நோக்கங்கள்.

(லண்டன் டைம்ஸ் பத்திரிகை).

செம்படையின் துருப்புகளோடு கலந்து நின்று சண்டைபோடுவதில் பிரிடிஷ், அமெரிக்கத் துருப்புகள் வேற்றுமை பாராட்டமாட்டார்கள். இருவர்களுக்குமிடையே மனே, பாவங்கள் வேறுபடலாம். ருஷ்யாவைச் சேராத தேசமக்களான மஸ்கோல்கள், உஸ்பெக்குகள், டர்க்மென்கள், காஸாக்ஸ் முதலியவர்கள் ருஷ்யர்களுடனும் யூக்ரேனியர்களுடனும் சமமாக நின்று யுத்தம் செய்து புகழ்பெற்ருர்களென்பது சிலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். யுத்தத்தில் கௌரவப் பதக்கம் பெற்றவர்களில் மூன்றில் ஒரு பங்கு ருஷ்யர்களல்லாதவர்கள்.

### வீடும், குடும்பமும்.

சமூகவாழ்க்கையில் ருஷ்யச் சிப்பாய் அமைதியுள்ளவன், நாவடக்கமுள்ளவன். தன்னுடைய சகாக்களிடம் மரியாதையாக நடந்துகொள்ளக்கூடியவன். சிநேக முறையில் ஊக்கமுள்ளவன். கலகலப்புப் பேச்சுள்ளவன். தாபமுள்ளவன். துக்கம், கோபம், சந்தோஷம் வரும் சமயங்களில் அவன் அதிக உயர்வான மனிதனுக நடப்பான். ஆகிலும் தன்னுடைய தினசரி வாழ்க்கையில் பொறுமைகாட்டுவான். அவன் புன்முறுகல் செய்வதே கிடையாது. உரத்துச் சிரிப்பதும் கிடையாது. அடிக்கடி பெருமூச்சுவிடுவான். துக்கப்படுவது அவனுடைய இயல்பல்ல. அவனுக்கு ருசிகரமான "Dug out" போன்ற சில பாட்டுகள் உருக்கமானவை. அவனுக்கு அனுபவம் ஏற்பட்டபோதிலும் கல்வி தாகம் குறைவுபடாது. அநேகர்கள் தங்கள் சட்டைப் பைகளில் பாடப் புஸ்தகங்களை எடுத்துக்கொண்டு யுத்தத்துக்கு சென்றிருக்கிருர்கள். அவனுடைய அபிருசிகளும் உயர்வானவை.

தங்கள் வீடு, குடும்பம் இவைகளில் அவர்களுக்கு அன்பு அதிகம். கடிதப் போக்குவரத்துக்கள் முக்கியமென்று அவர்கள் நினைக்கிருர்கள். ஸ்டாலின்கிராட் போர்முனையின் ஒரு பக்கத்துக்கு ருஷ்யாவின் வாலிபக் கவியான யூஜன்டால் மே டாவ்ஸ்கி விஜயம் செய்தபொழுது தளகர்த்தர் முதற்கொண்டு செம்படைத் துருப்புகள் எல்லோருக்கும் பாட்டுகள் எழுதவேண்டுமென்ற ஆசையிருந்ததை அவர் கண்டார். பத்திரிகைகளில் தங்களுடைய வியாசங்கள் வெளிவந்த பிறகு யுத்த முனையிலிருந்து ஏராளமான குறைகூறும் கடிதங்களை ருஷ்யக் கட்டுக்கதை எழுதுகிறவர்களும், நாடகம் எழுதுகிறவர்களும் எதிர்பார்க்கலாம்.

சொல்வன்மையின் திறமை வலுவானது. ஆகையால் யுத்தத்துக்கு முன்னால் நடைபெறும் மீட்டிங்குகளில் சேனாதிபதிகளும், ஆபீஸர்களும் நிகழ்த்தும் சொற்பொழிவுகள் அதிக பலனை உண்டாக்குகின்றன.

ருஷ்யாவின் தேசபக்தி வளர்ச்சியும் கவனார்கமுள்ளது. இப்பொழுது உலகத்தின் எந்த பாகத்திலுமில்லாதபடி செம்படையின் கீதங்களிலும் புத்தகங்களிலும் தேசபக்தி அபிப்பிராயங்கள் பகிரங்கமாக வெளியிடப்படுகின்றன. ருஷ்யத் துருப்புகளும், மாலுமிகளும் வரிசையாகச் செல்லும்பொழுது அவர்கள் பாடும் கீதங்களின் பிரிடிஷ் அமெரிக்கர்களின் ஊக்கமும் காணப்படுகிறது. ஆங்கிலேயக் கவிகளுக்குள் ரட்யார்ட் கிப்ளிங்கின் புஸ்தகங்களைத் தான் செம்படை முக்கியமாகப் படித்துவருகிறதென்பது மெச்சத்தகுந்தது.

## தாயகம் மீட்கப்படவேண்டும்.

ருஷ்யாவின் தேசபக்தி அடையாளம் காட்டுவதற்காக இப்பொழுது ஏற்பட்டதில்லை. ருஷ்யாவின் வீரம் பொருந்திய சரித்திரத்திலுள்ள மதிப்புள்ளதும் முக்கியமானதுமான பாகங்களை இப்பொழுதுள்ள ஜனங்களுக்கு எடுத்துக்காட்டுவதேயாகும். பொது உடமை ஜன சமூக ஆக்ஷிகளுள்ள தேசங்கள் ஒன்றுபட்ட சமஷ்டியாகயிருக்கவேண்டுமென்ற அபிப்பிராயத்துடன் சண்டைபோடும் ருஷ்யர்கள் குழிகளிலும் பீரங்கி வைப்பு ஸ்தலங்களிலும் அமர்ந்துகொள்ளும்பொழுது அவர்கள் மனதில் திடமாக சில விஷயங்கள் தோன்றிவிட்டன. யுத்த அரங்கத்துக்குப் பின்னால் யூரல் மலைச் சரிவுகளில் பெரிய தொழிற்சாலைகளும், ஸைபீரியாவில் சாகுபடி செய்யப்பட்ட பெரிய வெளிகளும், முடிவுபெறாத திட்டங்களுள்ள மாஸ்கோவும், நதிகளுக்கு சமீபத்தில் ஏராளமான நகரங்களும், காடு ஓரங்களில் குதூஹலத்துடன் திடமாக வேலை செய்யும் தொழிலாளர்களும், குடியானவர்களும்; பிரதானமான கோவில்களும், ஸ்டாலின் அரண்மனையும், லேப் செடிகள் நிரம்பிய மாதாக்கோவில்களும், கவிகளும், பாடகர்களும், கட்டுக்கதை எழுதுகிறவர்களும், அடிமைத்தனமென்னவென்பது அறியாமல் நியாயமும், அறிவும் விளங்கிய தேசத்துக்காகக் பாடுபட்டவர்களும், அதிகமான சகிப்புத் தன்மையுள்ள ஜனங்களின் முயற்சிகளால் மாறுதலடைந்துவரும் ருஷ்யா தேசமும் இருக்கிறதென்று செம்படை அறிந்திருக்கிறது.

செம்படை பின்வாங்கும்பொழுதுதான் ருஷ்யாவின் அருமையை அவர்கள் அறிந்தார்கள். வாஸிலி கிராஸ்மான் எழுதியுள்ள "பீபிள்ஸ் இம்மார்டல்" என்னும் புஸ்தகத்தின் கதாநாயகன் பின்வருமாறு சொல்லுகிறான்.

"நண்பனே, இந்த யுத்தத்தின் மூலம் நான் மாறுபாடடைந்துவிட்டேன். இப்பொழுது தான் ருஷ்யாவின் நிலைமையை நான் கண்டுகொண்டேன். ஒவ்வொரு நதியையும், காடுகளையும் கண்டு என் மனம் கலங்குகிறது. நமது ஜனங்கள் எப்பொழுதும் சுகமாக வாழவில்லை. ஆகிலும் கஷ்டங்களை நாமே மனதார அனுபவித்தோம். நான் ஒரு மரச்சோலை வழியாகச் சென்றபொழுது ஒரு மரம் சலசலவென்று சப்தித்தது. இதைக்கண்டு நான் பயமடைந்தேன். என் மனதை ஏதோ பிளப்பதுபோல் தோன்றிற்று. இந்த மரம் ஜெர்மானியர் வசமாகிவிடுமோவென்று நினைத்தேன்."

## அறுவடையாகாத மகசூல்.

நான் செம்படைத் துருப்புகளைப்பற்றி சிலாகித்துப் பேசுகிறேனென்று நினைக்க வேண்டாம். யூக்ரேனிலிருந்தும் பேயலோ ருஷ்யாவிலிருந்தும் பின்வாங்கியபொழுது வேனிர்காலம். எதிர்பாராதவண்ணம் நாட்டில் அழகும், சுபிக்ஷமும் நிரம்பியிருந்த சமயம். அறுவடையாகாத நிலங்கள்பேரில் ஜோடுகளணிந்த துருப்புகள் நடமாடுவதையும், மழை படபடவென்று பெய்ததையும், பிராசீனமாக உள்ள காடுகளிலுள்ள் மேபிள்ஸ் மரங்களை பீரங்கிக் குண்டுகள் நாசம் செய்வதையும், செற்றிபழங்களுள்ள தோட்டங்களை ஜெர்மானியர்கள் துவம்சம் செய்ததையும், புஷ்பச்செடிகளும் சூரியகாந்தி புஷ்பங்களும் நிரம்பிய யூக்ரேனிலுள்ள குடிசைகளை ஜெர்மானியர்கள் சின்னாபின்னம் செய்ததையும் கண்டு செம்படைத் துருப்புகள் மனம் கசிந்து ருஷ்யா நமது தாய் நாடென்றும், எதிரியை ருஷ்ய பூமியில் நிலைபெறவிடக்கூடாதென்றும் ஊக்கம் கொண்டன.

ருஷ்யப் படைகள் யோசனையுள்ளவர்கள். ருஷ்யர்களிடம் புத்திவிசாலமும், உயர்வான நோக்கமும் விஷயங்களை அறிந்துகொள்ளவேண்டுமென்ற ஆவலும் இருக்கின்றன. இன்று, மகத்தான போர்முனைகளில் தீரத்துடனும், புத்திசாலித்தனத்துடனும் சண்டைசெய்யும் ருஷ்யப் போர்வீரர்களைப்பற்றி ருஷ்யா பெருமைகொள்ளவேண்டியதுதான்.

# ஹிந்துஸ்தானி பாஷை தெரிந்த ஒரு இதாலிய பாராக்காரன். ஆனால் தன்நாட்டைப்பற்றிய உண்மையான நிலைமையைக் கேட்டுத் தெரிந்துகொண்டான்.

---

இதாலியிலிருந்து இந்தியக் கைதிகள் திரும்பவும் தன் பிறந்த நாட்டிற்குத் திரும்ப அனுப்பப்பட்டு துருக்கியிலுள்ள துறைமுகம் ஒன்றில் இறங்கியபொழுது அவர்களைக் கைதியாகப் பிடித்த இதாலியர்களைப்பற்றி சில ரசிக்கக்கூடிய கதைகளைச் சொன்னார்கள். அவைகளில் கீழே வருவது ஒன்றாகும்.

யுத்தக் கைதிகள் தங்குமிடத்தில் கொண்டுபோய் வைத்த சிறிதுகாலத்தில், இந்தியத் துருப்புகளில் ஒருவன், அவர்கள் இதாலிய பாராக்காரர்களில் ஒருவனுக்கு ஹிந்துஸ்தானி பாஷை தெரியுமென்பதை அகஸ்மாத்தாகக் கண்டுபிடித்தான். சிறிய காரணங்களைக்கொண்டும் அந்தப் பாராக்காரன், தனக்கு ஹிந்துஸ்தானி பாஷை தெரியுமென்பது அவர்களுக்குத் தெரியாது என்ற நம்பிக்கையோடு, ஏதாவது உபயோகமான விஷயங்களை அவர்களிடமிருந்து பெறலாம் என்ற நோக்கத்தோடு அங்குமிங்கும் உலாவினான்.

இந்தியத் துருப்புகள் உடனே கூடி சில முடிவுகள் செய்துகொண்டனர். அந்தத் துப்பறியும் பாராக்காரன் அவர்கள் தங்கியிருக்குமிடத்திலேயே உலாவும்போது அவன் கேட்ட ரகசியம் பின் சொல்லப்படப் போவதேயாகும்.

"உண்மையில் இதாலியர்களை எனக்குப் பிடித்திருக்கிறது. அவர்களை அவர்கள் தலைவர்கள் மிகவும் கீழான நிலைமைக்குக் கொண்டுவந்தது மிகவும் பரிதாபகரமானது. இப்பொழுது அவர்கள் சாம்ராஜ்யத்தை நம்மிடத்தும், இதாலியை ஹிட்லரிடமும் பறிகொடுத்து விட்டனர்''.

அடுத்தநாள் "இத்தகைய நல்ல மனிதர்களாகிய இதாலியர்கள், சென்ற யுத்தத்தில் தங்களுக்கு நேசக்கட்சியனராய் இருந்தவர்களோடு ஏன் சண்டைபோடவேண்டும்'' என்று பேசிக்கொண்டதைக் கேட்டான்.

மற்றுமொருமுறை, "நாம் எப்பொழுது ஜெர்மனிக்குப் போகப்போகிறோமோ என்று தெரியவில்லை'' என்ற இந்த சிறிய "தகவலை" க்கேட்டபொழுது அந்தப் பாராக்காரன் காதில் நாராசத்தைக்காய்ச்சி ஊற்றியதுபோலவே இருந்திருக்கும்.

"நாம் ஏன் ஜெர்மனிக்குப் போகவேண்டும்? இதாலியரிடமுள்ள எல்லாவற்றையும், ஜெர்மானியர்கள் எடுத்துக்கொள்ளுகிறார்கள். அதுவேபோல கைதிகளை எடுத்துக்கொள்வார்கள்போலும்''.

இம்மாதிரியான விஷயங்களைக்கேட்டு அறுவறுப்படைந்திருந்த அந்தப் பாரக்காரன் தனக்கு ஹிந்துஸ்தானி பாஷை தெரிந்திருப்பதனால் இதாலியத் துப்பறியும் உத்தியோகத்திலேயே தனக்கு ஒன்றும் தகவல் கிடைக்கபோவதில்லை என்பதைத் தெரிந்துகொள்ள வெகு நாட்களாகவில்லை.

---

# பாக்டாட், தேசத்தைப்பற்றிய தகவலைக்கொடுக்கிறது.

---

"இந்திய தேசத்தைப்பற்றிய தகவலைச் சொல்லப்போகிறோம்'' என்று பாக்டாட் ரேடியோ அறிவிக்கும்பொழுது, பர்ஸியாவிலும், இராக்கிலும் இந்தியத் துருப்புகள் சூழ்ந்திருக்கும் இடத்திலே உடனேயே அங்கு குழுமியுள்ளோர்களுக்குள் ஒரு நிசப்தம் ஏற்படும் ஒலிபரப்பிகள் எல்லாம் முற்றிலும் திருவப்பட்டும், ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவர்கள் குடும்பங்களைப்பற்றியும், கிராமங்களைப்பற்றியும், அவர்களுக்குத் தெரிந்து அந்த வாழ்க்கையைப்பற்றியும் கேட்பதற்கு மிகுந்த ஆவலோடு கேட்டுக்கொண்டிருப்பார்கள்.

பாக்டாட் ரேடியோ நிலயத்திலுள்ள ஒரு விசேஷ அனுபவத்திலிருந்து இந்தியத் துருப்புகளுக்காகத் தினசரி நிகழ்ச்சி ஒன்றை ஒரு இந்திய ராணுவ அதிகாரி ஒலிபரப்புகிறார்.

பெர்ஸியா, இராக் இவைகளின் தளகர்த்தரான லெப்டினண்ட் ஜெனரல் சர் ஹென்றிபௌனு லினுல் ஹிந்துஸ்தானியிலும் ஒரு சம்பாஷணை வெளியிடப்படுகிறது.

### சிறு பாட்டுகள்.

இந்தியாவிலிருந்துவந்த தந்தி கிராமங்களைப்பற்றியும், அங்குள்ள பயிர் பச்சைகள் நிலைமையைப்பற்றியும், கால்நடைகளைப்பற்றியும் இம்மனிதர்களுக்குக் கூறியது. நடுநடுவே, எல்லோருக்குப் பிடித்திருக்கும்படியான சினிமாவிலிருந்து எடுக்கப்பட்ட பாட்டுகள் தமிழிலும், தெலுங்கிலும், மராத்தியிலும், பெங்காலியிலும் ஹிந்துஸ்தானியிலும் பாடப்படுகின்றன.

சில சமயங்கள் அவர்களே அந்தச் சந்தர்ப்பங்களில் பாடும்படியாய் அழைக்கப்படுகின்றனர். அநேகர் ரேடியோ முன்பு ஒலிபரப்ப உற்சாகமுடையவர்களாய் இருப்பதால், ரேடியோ ஆபீஸர் இவர்களில் தேர்ந்தெடுக்கவேண்டியிருக்கிறது.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 150. (3-வது பிரிவு.)

| | | | |
|---|---|---|---|
| 12- 6-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலே | 6.00 |
| 13- 6-43 | முள்ளங்குரிச்சி | ... ,, | 7.00 |
| ,, | கோட்டைக்காடு | ... ,, | 7.30 |
| 14- 6-43 | அன்னவாசல் | ... ,, | 7.00 |
| ,, | கீழக்குறிச்சி | ... ,, | 7.30 |
| 15- 6-43 | மழையூர் | ... ,, | 7.00 |
| ,, | கரம்பக்குடி | ... ,, | 7.30 |
| 16- 6-43 | ராமச்சந்திரபுரம் | ... மாலே | 7.00 |
| ,, | ராயவரம் | ... ,, | 7.30 |
| 17- 6-43 | கொடும்பாளூர் | ... ,, | 7.00 |
| ,, | விராலிமலே | ... ,, | 7.30 |
| 18- 6-43 | வாளரமாணிக்கம் | ... ,, | 7.00 |
| ,, | எம்பல் | ... ,, | 7.30 |

### பிரஸங்கம் 151. (4-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 19- 6-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலே | 6.00 |
| 20- 6-43 | நீர்ப்பழனி | ... ,, | 7.00 |
| ,, | ஆலூர் | ... ,, | 7.30 |
| 21- 6-43 | காரையூர் | ... ,, | 7.00 |
| ,, | இடையாத்தூர் | ... ,, | 7.30 |
| 22- 6-43 | வடவாளம் | ... ,, | 7.00 |
| ,, | செம்மட்டிவிடுதி | ... ,, | 7.30 |
| 23- 6-43 | நார்த்தாமலே | ... மாலே | 7.00 |
| ,, | உப்பிலியக்குடி | ... ,, | 7.30 |
| 24- 6-43 | அண்டக்குளம் | ... ,, | 7.00 |
| ,, | கிள்ளனூர் | ... ,, | 7.30 |
| 25- 5-43 | கொன்னையூர் | ... ,, | 7.00 |
| ,, | மேலவேகுப்பட்டி | ... ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலே 4-மணி.

| | |
|---|---|
| 12— 6—43 | வெட்டம்விடுதி. |
| 13— 6—43 | தீத்தான்விடுதி. |
| 14— 6—43 | விராலிமலே. |
| 15— 6—43 | வடகாடு. |
| 16— 6—43 | ராயவரம். |
| 17— 6—43 | குழிபிரை. |
| 18— 6—43 | புதுக்கோட்டை. |
| 19— 6—43 | பொன்னமராவதி. |
| 20— 6—43 | மருதன்கோன்விடுதி. |
| 21— 6—43 | அரிமளம். |
| 22— 6—43 | பேராம்பூர். |
| 23— 6—43 | கரம்பக்குடி. |
| 24— 6—43 | கீழாநிலே. |
| 25— 6—43 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—14-6-43.